67

உ

கடவுள் துணை

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும்பிரசுரமாகும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-க0.] விரோதிகிருதுஸு மார்கழிமீ [பகுதி-உ

உள்ளுறை.

கையறுநிலை:—கவிஞர்கள்.	சாக
மலையாளம்:—ஸ்ரீமத்-து. அ. கோபிநாத ராவ்.	கூச
இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரம்:— ஸ்ரீமத்-சி. கணேசையர்.	க0ச
பாடசாலை:—ஸ்ரீமத்-தி. சதாசிவ ஐயர்.	க0கூ
கைத்தொழிற்கண்ணாடி:— தேச சஞ்சாரி.	ககஉ
இரங்கற்பாக்கள்:— ஸ்ரீமத்-வயி. நாக. ராம. அ. இராமநாதச்செட்டியார்.	ககஅ
புத்தகக்குறிப்பு:—பத்திராதிபர்.	கஉக

பத்திராதிபர்—திரு. நாராயணையங்கார்.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] 1912. [தனிப்பிரதி அணா-8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

மறந்துவிடாதீர்கள்!

உண்மையில் லாபம் அடைவீர்கள்.

உங்களுக்குப் பட்டுப்புடவைகள், ரவிக்கைக்குட்டைகள், வெண்பட்டு வேஷ்டிகள், பட்டுபேஸ்காணுக்கள், மடிதாவளிகள், உருத்திராக்ஷங்கள் முதலிய சாமான்கள்வாங்க விருப்பமுண்டானால் உடனே ஸ்ரீ காசிப் பட்டுப் பீதாம்பர வேர்ஹவுஸ், கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனிக்கு எழுதுங்கள். உங்களுக்கு அவர்கள் அனுப்பும் தினுசுகள் நல்ல திருப்தியைக்கொடுக்கும். சகலவிதப் பட்டுப்புடவைகளின் விலைகளடங்கிய பெரியகேட்லாக் இனமாக அனுப்புவார்கள். உடனே உங்கள் விலாசம் தெரிவியுங்கள்.

K. S. MUTHIAH & Co.,

The Silk Pitamber Ware-House,

BENARES CITY.

எழுதும் நண்பர்கள் இப்பத்திரிகையிற் கண்டதாக எழுத வேண்டுகிறேன்.

THE LATE SRIMAN P. PANDITHOREYSAMY THEVAR Avl.,

Zemindar of Palavanatham & President-founder of the Madura Tamil Sangam.

BORN-MARCH 1866, DIED-DECEMBER 1911,

உ

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி-க௦] விரோதிகிருது ஹூ மார்கழிமீ [பகுதி-உ.

பாலவனத்தம் ஜமீந்தாரும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதியுமாகிய
ஸ்ரீமாந்.

பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்

காலஞ்சென்றமைக் காற்றுது புலவர்கள் பாடிய

கையறுநிலை.

அமிழ்தினுமினிய நந்தமிழ்மொழியை முன்னர் முதலிடைகடையென்னும் முச்சங்கம் நிறுவிப் பலபாண்டிய மன்னர்களும், சேரசோழமன்னர்களு மேனையசிற்றரசர்களுஞ் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர். அக் காலத்து நந்தமிழ்மொழி பல்வகைநலன்களும் நிறைந்து ஒப்புயர்வற்று விளங்கியதென்பது யாவரும் நன்கறிந்ததே. பிற்றைஞான்று தமிழ்மொழி யாதரிப்பாரின்றி முன்னிருந்த சீருஞ்சிறப்புங் குன்றிப் படிப்பாருங் கேட்பாருமின்மையால் தாயில்லாச்சேய்போல் நிலைதளருமிக்காலத்துத் தமிழையபிமானித்து மதுரைத் தமிழ்ச்சங்கந்தாபித்துத் தந்தேக சிரமமும் பொருட் செலவும் நோக்காது தமிழபிவிருத்தியொன்றே கருதிப் பாடுபட்டுத் தமிழ்ப்புலவர்களிடத்துப் பேரன்பு பாராட்டிவந்த பாலவனத்தம் ஜமீந்தார் ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவரவர்கள் காலஞ்சென்றமைக் காற்றுதிரங்கிப் புலவர்கள் பாடிய பாடல்கள் எண்ணிறந்தன. அவையெல்லாந்தவறாது செந்தமிழில் வெளியிடுதற்கிடம்போதாதாதலால் ஒவ்வொருவரும் பாடிய பற்பல பாடல்களுள் செந்தமிழ் நேயர்களும் பிறருமவராது தாபமுணருமாறு இங்குச் சிற்சிலவே வெளியிடப் பெறுகின்றன.

---

*

இவை

காந்தைத் தமிழ்ச்சங்கத்தார் கூடிய அநுதாபக்கூட்டத்தில் படிக்கப்பட்டவை.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஐயோவித் தமிழுலகை மென்படுமோ வென்செயுமோ வந்தோ வந்தோ, துப்பாரும் புகழ்ப்பாண்டித் துரையரசைத் தமிழ்மகட்குத் தொகைசா னன்மை, செய்தானைச் செல்வர்தமிற் சிமானை வானேயுஞ் சிவஞா நல்லீ, கையானைக் கவிஞர்கடங் கண்மணியைக் காலமெனுங் கடற்போகட்டே. (௧)

தமிழுலகப் பெருஞ்சேயே தமிழ்த்தாயின் றமிழ்த்தாயே தங்குமன்புச், சிமிழெனுநற் சிந்தையனே சீர்த்திதரும் புந்தியனே செல்வமிக்கா, யுமிழுமெழிற் றிருமுகனே யுயர்பாண்டித் துரையரசே யுனைத்தோற் றிந்நா, ளமிழ்கிறதே தமிழுலகம் பெருந்துயர வளக்கருளே யந்தோ வந்தோ. (௨)

மண்ணினையே மிகுத்துரைத்து வானேரு மேமாக்க வந்திப்பாரில், நண்ணினையே தமிழ்மணமித் தமிழகமும் பிறவுலகும் நாளும் வீசப், பண்ணினையே பண்ணியதெல் லாம்பாண்டித் துரைத்தேவே பற்றுதாமென், றெண்ணினையே யென்செய்கே முனையிழந்தந் தோகெட்டேமென்செய் கேமே. (௩)

நாடெல்லாம் பொருள்செய்து தமிழ்மகளா ருறையவிலம் நவீனமாயிவ், வீடெல்லாம் போலாது மெய்வீடு போற்சமைக்க வேண்டிச்சாயன், மாடெல்லாங் கண்டறிய மாபாண்டித் துரைசென்றான் மனம்படாத, பாடெல்லாம் பட்டுருகிப் பதைக்கின்ற தென்னேயோ பாவலோர்க்கே. (௪)

தேசிடுநற் றிருமேனி திகழ்பாண்டித் துரைத்தேவிற் றேன்பாலென்னப், பேசுமொரு பிரசங்கப் புலமைக்குந் திருவிற்கும் பிறவி

தீர்த்துச், சாசுவதந் தருமரிய சைவநிலைச் சார்பிற்குந் தனிவண் மை க்குங், காசினியிற் சிறந்தாராங் காட்சியரைக் காண்பதுமெக் கால மேயோ. (௫)

பிறந்தாருட் பெரும்பேறு பெறும்பாண்டித் துரைத்தேவே பீடு சான்று, சிறந்தாய்மற் றாழ்வலியாற் சென்றுபசச் செலவினுமோர் செ ப்பங் கண்டா, மிறந்தார்க டிறத்திறப்பா ரியற்கையெனச் சிலகால மெண்ணிப் பின்னர், மறந்தாலு மறந்தறியா வகையுறலின் மறவி கெடு மாண்பிற் றென்றே. (௬)

தாய்மொழியை வளர்த்தபெருந் தகைப்பாண்டித் துரையாவி தா னென் றுன்னுந், தூயமனே சுற்றமெலாந் துறந்தேகுங் கரிநாளிற் றுயர்ந்தன் னேனைக், காய்சினத்த பெருவழுதி கடுங்கோனென் றின் னவரிற் கவிய ரங்க, மேயவரோ டிணைத்துமுறை யேழைந்து மூன் றென்றென் றெண்ணு வாமே. (௭)

கல்லாரைக் கற்றவராச் செயும்பாண்டித் துரைவாயிற் கால னெ ன்னுஞ், சொல்லாடிப் புகுந்திருந்து சோர்வுழிக்கொண் டேகியதோர் சூழ்ச்சி கண்டு, மெல்லாரு முய்வறியே மெமனமனென் றிருக்கின்றே மிமையோர் முன்னுப், பல்லாரு மெமைப்பாரார் படியாரென் றிசைக் கின்ற பான்மை நன்றே. (௮)

வேண்பா.

விரோதி கிருதே விருச்சிகமே யுங்கள்
விரோதம் விரித்துரைக்க வேண்டா—குரோதத்தாற்
றம்மிற் கடையாஞ் சனியு மிரேவதியு
மும்மிற் கலந்துற்ற தோ. (௯)

விரோதிகிருது-ஸ்ரீ
மார்கழிமீ ௯-உ
தஞ்சையைச் சார்ந்த
கரந்தைத் தமிழ்ச்சங்கம்.

R. வேங்கடாசலம்பிள்ளை.

ஸ்ரீமான் பாண்டித்துரைச்சாமித்தேவரவர்கள் அரமனை வித்வானும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்தினங்கத்தினரு ளொருவருமாகிய

அரங்கசாமி ஐயங்காரவர்கள்

பாடியவை.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஒளியாக்குமதிவதனத்துக்கிரபாண்டியமகிபவொன்னுருள்ளங்
களியாக்கியருந்தமிழ்தேர்கலைஞர்களைப்பேரிலவங்கனிகள்காத்த
கிளியாக்கியெமதூழைவெளியாக்கிப்பரிவுமிகுகேளிர்கண்க
டுளியாக்கியகன்றனையாலழகிதுயர்சிவபதநீதோய்ந்தவாறே. (க)

தேனடுத்தகடுக்கையினைஞ்செழுத்துங்கண்டிகையுந்திருவெண்
ணீறும், வானடுத்தவருக்கருள்சிற்றம்பலமுமொருகணமுமறவா நின்
னை, யானடுத்துநெடுங்காலம்பயின்றதெலாஞ்சரமகவியியம்பற்கேயோ
ஆனெடுத்தவுடற்பொறையேனென்புரிவேனுயிர்பிரிந்துமுறைகின்றே
னே. (உ)

புவிக்கினியபெருங்குணமும்புகழ்க்கினிய பெருங்கொடையும்புரி
விற்போந்தார், செவிக்கினியபணிமொழியான் முகமனுரைபகர்பரிவுந்
தெய்வக்கம்பன், கவிக்கினியபொருள்விரிக்குமொழித்திறனுமினியெ
வர்பாற்காண்பமென்னத், தவிக்கவெமையுலகிடைநீத்தொருநீவிண்பு
குந்ததுதான்றகவோவையா. (௩)

செய்யகவிப் பிரசங்கம்புரிதொறு நின்னருகிருக்குந் திருவுந்தீர்ந்
தே, ஐயநினக்கினிதிசைக்குமெய்யன்பனெனவழைக்குமருமை தீர்ந்
தேன், வையமுழுவதும் பரவுநினைச்சார்ந்த கவிஞனெனுமதிப்புந்தீர்ந்
தேன், வெப்பவினைவிளைவிதனின்மேலுளதோவினியெனக்குவிளம்பி
னம்மா. (௪)

வெண்பா.

அருமைபறியாரகந்தோறுஞ்சென்று
பெருமைகுலைய நலம்பேசி—வருமொழியால்
வெப்துயிர்த்துவாடவோமேதினியிலெம்மைவிட்டாய்
பொய்தவிர்த்தநீவான்புகுந்து. (௫)

வரிசையறியார்மதியார்வழங்கும்
பரிசறியார்தீதுநலம்பாரார்—விரிசகத்துத்
தம்மையேபேணித்தருக்குநரைப்பாடவோ
வெம்மையேவிட்டாயிவண். (௬)

கட்டளைக்கலித்துறை.

சீரார்விரோதிகிருதாண்டுகார்த்திகைத்திங்கள்சனி
யேரார்வளர்பிறையேகாதசியோடிரேவதியிற்
சோராதவண்மைமுகிலன்னபாண்டித்துரைமகிபன்
வாரார்முலையுமைபங்காளன்றாணிழன்மன்னினனே. (௭)

திருவாவடுதுறை ஆதீன வித்துவானும்
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள்

பாடியவை.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மதியெழநாணின்றித்தாரகையெழல்போற்றமிழ்ச்சங்கம் வளர்த்
துநீதான், றுதிமிகத்தோன்றிடவந்தத்தமிழறியாப்பலமன்னர்தோன்
றிநின்றார், மதிமறைநாட்டாரகைதோன்றிடல்போற்பாண்டித்துரைநீ
மறைந்தவிந்நாட், பதிதொறுமம்மன்னரிருந்தனரவாற்றமிழ்க்குமிகு
பயனென்னாமே. (௧)

துன்னுபலநாகம்விரும்பாதட்டநாகங்கள்சூழத்தாங்கு
நன்னிலத்தையுயர்சேடனதுபோற்பன்மன்னவரைநாடுறாது
தன்மரபின்மன்னரொடுதமிழ்ச்சங்கந்தாங்கியநீதான்மறைந்தா
யன்னநின்றன்மரபினரேதாங்குவர்பாண்டித்துரையெம்மரசேவாழி.

மருவுசெந்நெல்லாலாயமுளைமீண்டுமந்நெல்லாய்வருதல்போலப்
பொருவில்கல்வியறிவொழுக்க மன்பருளாசாரங்கள் பொருந்திவாழ்ந்த
விரிபுகழ்ப்பாண்டித்துரைதன் பொருளாகவருதலினால் விளங்குமன்ன
னுரியகுணம்பெறுசோமசுந்தரபாண்டியன்வாழியூழிதானே. (௩)

மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்

மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்

பாடியவை.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

மண்ணாடு புகழ்நிரம்ப வாழ்ந்தபெரு வாழ்வென்று மன்னரெல்லா
மெண்ணாடு தலைமைபெற்றுமதுரையினிற்றமிழ்ச்சங்கமிருத்திவைத்தே
யுண்ணாடு மானந்த முறுபாண்டித் துரையரசே யுன்போல்வார் யார்
விண்ணாடு போய்ப்புகுந்தாய் மீண்டின்னம் வாராயோ விளம்பு வாயே.

வடமொழியொன் றேதேவ பாடையென்று ரம்மொழியை மனி
தரானோர், திடமுடன்கற் றுரிதுபோற் றென்மொழியைத் தேவரெ
லாந் தினமுங் கற்க, வுடனேபோய்க் கற்பிப்போ மெனநினைந்தோ
வொன்றேனு முரைத்திடாம, லடலரசர் புகழ்பாண்டித் துரையேவான்
புகுந்தாய்நின் னறிவு நன்றே. (உ)

தமிழ்வளர்க்கும் பாண்டியர்சந் ததியொழிந்த தெனக்கவலைச்
சலதி தன்னி, லமிழ்தரு காலத்தி லஃ துண்டென்னத் தலையெடுத்திங்
கதனைக் கையா, லுமிழ்தருபொற் சங்கத்தா லூட்டிவளர்த் தாயங்
தோ வுனக்கி யாங்க, ளிமிழ்திரைஞா லத்தினிற் பாண்டித்துரையே
செய்கைம்மா றென்னே யென்னே. (ங)

கொலைபுரிதல் பாவமெனத் தெரிந்திருந்துந் துப்பாக்கி கொண்டு
சுட்டுஞ், சிலைவளைத்துங் கொன்றுவிலங் கினம்பறவை தின்று திரி
தீயர் போலா, துலைமெழுகாய் மனமுருகி யவற்றுயிரை யுன்போல
வொருசற் றேனும், விலைகொடுத்து மீட்டினிக்காப் பார்யார்பாண்
டித்துரையே விளம்பு வாயே. (ச)

நாற்றிசையு முனைப்பார்த்து வைத்ததமிழ்ச் சங்கமெலா நாடிச்
சென்று, வீற்றிருந்து பிரசங்கஞ் செய்துபலர் கருத்தினுக்கும்
விரோத மின்றிப், போற்றிசைத்து நியாயங்கள் புகன்று சம ரசஞ்செ
ய்து புகழ்பூண் டுண்மை, தேற்றிய நின் பிரிவையார் சகிப்பர்பாண்
டித்துரையாஞ் செம்மற் கோவே. (ரு)

ஓங்குதமிழ்ப் புலவர்களைப் பண்டைநா ளரசர்போ லுவகை பூத்துத், தாங்குசம மரியாதை செய்துகவி கேட்டவர்தந் தகுதி நோக்கி, வாங்குகெனச் செம்பொனுத வியபாண்டித் துரை வள்ளால் மற்றுன் போல, வீங்குதே டியுமொருவ ரெதிர்ப்படுவா ரில்லையினி யென்செய் வோமே. (சு)

எந்தவிதத் தினுமுயர்பாற் கரசேது பதிப்பெருமா னிறந்தா னென்ற, வந்தநிமி டத்திலே நீயொருவ னிருந்ததனு லந்தத் துன்ப, மிந்தநிலத் தினிற்றமிழ்தே ரறிஞரெலா மாற்றினர்நீ யிறந்த துன்பம், வந்ததன்றிப் போவதற்கு வழியில்லைபாண் டித்துரையா மன்ன ரேறே.

சில்வாழ்நாட் சிற்றறிவா ருணர்ச்சிசெயா ரெனத்தெரிந்து தேடித் தேடிப், பல்வாய்மை யுறுநூலின் சாரமெலாந் திரட்டியெம்போற் பலர்க்கி லேசாச், சொல்வான்பன் னூற்றிரட்டென் றொருநூல்செய் தளித்தபெருந் தோன்றால் நீயிங், கில்வாழ்வில் வாழ்வென்றோ வெம்பிரான் பதநிழல்புக் கிருந்தாய் வாழி. (அ)

கல்வியழ கேயழகென் றூர்கற்றோ ரதனோடு கமலச் செம்பூச், செல்விபெறு மதனுமவா முருவழகும் பெற்றறிஞர் திரள்சங்கத்தில், நல்விடய மத்தனையும் பற்பல்பிர சங்கத்தி னவின்ற நின்வாய்ச், சொல்லினின் னமுங்கா ணுநாளுண்டோ நம்பாண்டித்துரைப் பூமானே. ()

எட்டிலெழு தவ்வைமன்ன ரிற்கற்றோர் சிறப்புடைய ரெனுஞ்சொ லந்தப், பாட்டினிற் கண்டோ மதனைக் கண்ணிற்கா ணும்படிக்குப் பாவல்லாரைக், கூட்டிவைத்திச் சங்கத்திற் காட்டினையை யாவுன்றன் குணங்க ளிந்த, நாட்டிலினி யார்க்குவரு மந்தோபாண்டித் துரைநன் னவலோனே. (க0)

காணவரு வாரையின்று வாநாளை வாவென்று கடத்தி டாம, லூணருந்தும் வேளையா யிருந்தாலும் வரவழைத்தே யுள்ளன்பாக, வேணவா வுடன்பேசி வேண்டுவன வுதவிசெய்து விடுப்பா யேயிம், மாணமருஞ் செயலெங்குக் கற்றனை பாண்டித்துரையாம் வானோர் வாழ்வே. (கக)

பிறப்பிறப் பிலாதவனே பரமபதி யெனப்பலகாற் பேசும் பேச்சா, லுறப்பிணித்துச் சகலருக்குஞ் சைவசித்தாந் தத்துண்மை யுறுதிகா

ட்டுஞ், சிறப்பினுயர் வாம்பாண்டித் துரையரசே நின்னையொரு சிறி தானுலு, மறப்பினன்றோ நினைப்பமெமை நினைக்கவில்லை யெனும்வருத் தம் வையயே னீயே. (கஉ)

தாய்ப்பாடை யெனச்சிலர்கள் கொண்டாடுந் தமிழைவளர் தரச் செய்தாயாய், வாய்ப்பாக வந்தெனக்குச் சங்கமொரு மகவென நீ வா யாற் சொன்ன, தேய்ப்பாவச் சங்கமுமியா மெல்லோருந் துன்புறவிவ் விடத்தை விட்டுப், போய்ப் பாண்டித்துரை யேவான் புகுந்தொளித் தாய் நின்கருத்தென் புகலு வாயே. (கங)

எல்லாரும்புலவரா யிருக்குமிட மேசிறந்த தெனவான் சென்று சொல்லாரும் புலவர்சில ருள்ளவிந்த வுலகைவிட்டுத் துறந்தாய் போ லும், பல்லாரும் புகழ்பொன்னுச் சாமிநரேந் திரன்மகவாய்ப் பாரிற் றோன்றி, நல்லாரு ணல்லவனு யிருந்தபாண் டித்துரையா நங்கோ மானே. (கச)

மண்டலத்தி லொருவரிறந் தால்மனைவி மக்கள்சுற்றம் வருந்தி யேவாய், விண்டழுவதன்றிவே றெவரழுவார் நீயிறந்த வெய்ய தீமை, கண்டவருங் கேட்டவரு நாடெல்லா மழக்கண்டோங் கருதில ன்ன, தெண்டகுநின் குணப்பெருமை யெம்பாண்டித்துரையரசே யிப ம்பிற் றன்றே. (கரு)

மன்னார்குடி காலேஜ் தமிழ்ப் பண்டிதர்

சர்க்கரை இராமசாமிப் புலவரவர்கள் பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

புண்ணியமெல்லாந் திரண்டோர் புருஷவடிவாய்முகவாபுரியிற்றோ ன்றிக், கண்ணியமெல்லாம்படைத்துக்கவிஞருக்குத்தாயாய்முற்காலத் தான்றோர், பண்ணியநூலனைத்தையுமிப்பாருணரும்படிமதுரைப் பதி யினன்கென், றெண்ணியசெந்தமிழ்ச்சங்க மியற்றியபாண்டித்துரை விண்ணேகினையோ. (க)

கன்னிமுத விம்பவரை காறுமுளோர் பணிசேது காவ லற்கோர் மன்னுயிராய்த் தமிழ்நாட்டுவாணருக்கோர்கற்பகமாய் மதுரைச்சங்கத் துன்னுதமிழ் விற்பனர்க்கோர் சுடர்மகுட மாம்பாண்டித்துரை நீமுன் வாழ், பொன்னுலகம்போயெம்மைப் புலம்பவிட்டாயென்செய்வோம் புகலுவாயே. (உ)

ஈவாருங்கொள்வாருமில்லாதவானத்திலிருந்துவாளா
வாழ்வாரேவன்கண்ணரெனத்தேவர்வகுத்தகுறண்மறந்துற்றுயோ
பாவாணர்குலஞ்சூழும்படிமதுரைச்சங்கத்தாபனஞ்செய்தென்றுஞ்
சாவாதபுகழ்படைத்ததருவெனும்பாண்டித்துரையாந்தருமவானே. ()

சொன்னமயமாஞ்சோமசுந்தரவிலாசமதிற்றென்னுட்சேது, மன்னர்பிரான்பாற்கரபூமான்முனெளியேற்காட்டிவள்ளாலீவன், கன்னலெனக்கவிசொலுஞ்சர்க் கரைப்புலவன் வழித்தோன்றுங் கவிஞனென்று, பன்னியதைமறப்பேனேபாலவனத்தத்தரசேபாவியேனே. (ச)

புவிக்கமுதமாய்ச்சாந்துப்புலவர்பிரான்செய்கோவைப்பொருவிலாத
கவிக்கெளியேனெழுதுமுரைகண்டு விபந்ததற்கிலக்காய்க்கவியுமீந்து
செவிக்கினியமுகமனுரைசெப்பியபாண்டித்துரைநீதேவரெல்லாங்
குவிக்குமிருகரத்தினெதிர்கொளமகிழ்வாயாம்புலம்புங்குரல்கேளா
[யோ. (ரு)

நாகை "நீலலோசனி"ப் பத்திராதிபர்

ஜி. சதாசிவம் பிள்ளையவர்கள்

பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்பாண்டபரசிவன்பாலிரண்டறவே யாண்டிருக்குமெங்கள்கோவே
தென்பாண்டித்துரைச்சாமித்தேவாநீதேவபதஞ்சேர்ந்தாயென்னுந்
துன்பாண்டமொழிகேட்டோந்துயராண்டநெஞ்சினராய்த்துடிதுடித்
தே, மன்பாண்டதமிழணங்கையாராண்டுவாவிடுத்திங்ககன்றுயந்தோ.

சித்திரத்தினீயிருப்பாய்சிந்தையுளேவீற்றிருப்பாய்சிறப்பாச்செய்த
புத்தகத்தினீயிருப்பாய்புலவர்கடம்பாவிலெலாம்புகழாய்நிற்பாய்
பத்திரிகைதனிலிருப்பாய்தமிழ்ப்பாண்டித்துரைவேந்தேபாரிலெங்கு
நித்தியமாயிருக்குநினைநிலங்கடந்தானென்றுலகர்நிகழ்த்தலென்னே.

தென்பாண்டியுலகைவிடச்சிவலோகஞ்சிறந்ததெனச்செப்பலாமோ
வின்பாண்டதென்மொழியிலினியதெனவடமொழியையியம்பலாமோ
வன்பாண்டபுலவரினுமப்புலவரறிஞரெனவறையலாமோ [யே.
மன்பாண்டித்துரைவேந்தவானுலகம்வழிக்கொண்டவகைசொல்வா

தெள்ளமிர்ததாரையெனத்தேனமிர்ததாரையெனத்தித்திப்பான, வெள்ளைநிறப்பாலென்ன வித்துவரத்தினங்களெலாம் வியக்கும்வண்ணங், கொள்ளைகொள்ளையாயுதவும் பிரசங்கமென்றுகொலோ குளிரக்கேட்போங், தள்ளரியபெருநீதித்தமிழ்ப்பாண்டித்துரையரசே சாற்றுவாயே. (ச)

சவைத்தலைமைவகிப்பதற்குத்தக்கவனீயொருவனென்றே தரணியுள்ளா, ரவைத்தலைமைக்கழைத்திடவேயணுவளவு மறுக்காமலாங்காங்கெய்திச், சுவைத்தமிழிற்பிரசங்கஞ்சொரிந்திடுவாயினியாரைத் துணைக்கொள்வாரோ, புவித்தலமெலாம்புகழுந்தமிழ்ப்பாண்டித்துரை வேந்தேபுகலுவாயே. (ரு)

திருத்துறைசைநகர்ப்பழநிக்குமாரமுனி தன்னிடத்திற்சிறிதுகற்றேன், பெருத்தகலைபயின்றனைநீயிருவேமுமொருகுருவின்பிள்ளையென்னும், பொருத்துசகோதரவுரிமைகாட்டிவந்தாயென்னிடத்திற்புகழ்பெற்றோங்கு, முருத்தகுமெய்த்தமிழ்ப்பாண்டித்துரைவேந்தே யுனைபொப்பாருலகில்யாரே. (சா)

ஓகைதருங்கண்ணபிரானுயர்விதுரன்விருந்துண்டவுயர்வேபோல
நாகைநகர்க்கெழுந்தருளிநல்லவர்கள்புடைசூழநான்குவைகல்
பாகமுறும்விருந்தருந்திப்பானூறுநன்னீரெனவேபழகிச்சென்றாய்
வாகையுறுந்தமிழ்ப்பாண்டித்துரையரசேநின்னன்புமறக்கப்போமோ.

அருள்வழியுஞ்செழுஞ்சைவசித்தாந்தத்தரும்பொருளையருமையான
பொருள்வழியும்பிரசங்கப்புனிதவுபதேசத்தாற்பூமியெங்கு

மருள்வழியைமாற்றிவந்த வண்மையைப்போல் வானுலகில் வழங்கல்
வேண்டித், தெருள்வழியுந்தமிழ்ப்பாண்டித்துரையேநீசென்றாயோ
[செப்புவாயே. (அ)

கம்பரேயிம்பர்வந்துகவித்திறத்தின்கருத்துணர்ந்துகழறுமாபோ [வா
விம்பரும்பரும்புகழவிராமகதைப்பெரும்பொருளையினிதாய்ச்சொல்
யும்பருலகத்தவர்க்குமுறுராமகதையமுதையுவந்துண்பிக்கப்
பம்புபுகழ்த்தமிழ்ப்பாண்டித்துரையரசேபடர்ந்தாயோபகருவாயே. ()

விழுந்ததமிழெழுந்திந்த மேதினியிற்சஞ்சரிக்க விதித்தாய்நீதா
னுழுந்தமிழும்போதுக்குளுடல்விடுத்தாயுனையெழுப்ப வுணரகில்லோ
மழுந்துகின்றோம்பிணைகொடுத்திங்கழைத்துவரும்வித்தையையுமறிய
மாட்டோஞ், செழுந்தமிழ்ப்பாண்டித்துரையேபுலவரெனப்பேர்வகித்
தென்செய்துள்ளோமே. (௧௦)

தஞ்சை ஸ்கூல் சூப்ரைவேசரும்
தமிழ்ச்சங்கத்து அங்கத்தினருமாகிய
ஐ. சாமிநாத முதலியாரவர்கள்
பாடியவை.

கலிப்பா.

பாண்டித்துரைச்சாமிப்பாவலனேபாவலர்கள்
வேண்டியனவளிக்கும்வித்தகனேவித்தகமா
ராண்டகையேபாராளரசேயரசரெலாம்
வேண்டியழைக்கும்விருந்தேவான்சென்றனையே. (1)

பேராலேதென்னன்பிறப்பாலேகோச்சோழ
னூராலேசேரனுவந்ததமிழ்காத்துவந்த
சீராலேமூவேந்துஞ்சேர்ந்தவொருவேந்தம்
தாராலேயெய்தவருமையாவேயையாவே. (2)

எண்ணேயெழுத்தேயெழிலார்தமிழ்ப்புலவர்
கண்ணேகருத்தேகருதரியகற்பகமே

பண்ணைபனுவலேலபார்க்குங்குணமேநீ
விண்ணேகவந்தவிரகமறியோமே. (3)

மண்ணுலகிலுள்ளமதிப்புலவர்தம்மைவிட
விண்ணுலகிலுள்ளவெறும்புலவர்மேலென்றோ
மண்ணுலகைச்சங்கம்வகுத்துயரச்செய்ததுபோல்
விண்ணுலகைச்சங்கம் விதித்துயர்த்தவேண்டினையோ. (4)

பன்னுபுகழ்ப்பாற்கரப்பேர்ப்பார்த்திபனைப்பார்க்கவென்றோ
பொன்னுச்சாமிப்பெரியன்பொன்முகத்தைக்காணவென்றோ
முன்னரேசென்றிருந்தமுன்னையரைச்சாரவென்றோ
வென்னினைந்தோவையாநீயேகினையேவானுலகே. (5)

கோரத்தைவிட்டுவிண்ணோர்கோமானெதிர்ந்துவந்து
காரைத்தளையிட்டகாவலவாவென்றானோ
வாரத்தைத்தாங்கியிட்டவம்புயவாவென்றானோ
வீரத்தைச்சிந்தியிட்டவித்தகவாவென்றானோ. (6)

தேவருள்ளேநீயுமொருதேவனெனவெண்ணினானோ
தாவில்லாச்சங்கத்தலைமைகொண்டகாரணத்தான்
மூவருள்ளுமூவாமுதல்வனைநீயொப்பையன்றோ
தேவர்கோனின்பெருமைதேறுந்திறனுளனோ. (7)

வானகத்தேநீபுகுந்தாய்மண்ணகத்தேவைத்தசங்கந்
தானகத்தேயென்செய்வலென்றுதயங்காமே
தேனகத்தேவைத்துலவுசெந்தமிழுஞ்சோராமே
கானகத்தேநட்டமிடுங்கத்தனருளுவனே. (8)

நின்றபுகழுடையாய்நின்னைத்தன்பங்கழைத்த
கொன்றைமுடிப்பெம்மானைக்கும்பிட்டெதிர்நின்றே
வொன்றியசீர்பாடியுவப்பித்துனதுகுல
மென்றும்போனன்றோங்கியேய்ந்திருக்கவேண்டுவையே. (9)

சித்தாந்தசரபம்-அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செந்தமிழோங்கியகாலத்தினிற்பாண்டிமன்னர்பலர்தெய்வச்சங்க
முந்திவளர்த்தாரென்னலதுசிறப்போதமிழ்மணமேமுற்றுந்தீர்ந்த
விந்தநாளினிற்சங்கநீவளர்த்தாயெனல்சிறப்போயெழினற்கல்விச்
சுந்தரஞ்சேருயர்பாண்டித்துரைச்சாமிச்சீமானேதூய்மையோனே. (௧)

மிக்கதமிழறிஞர்சிகாமணிகணடுநாயகமாய்வீற்றிருந்து
தக்கநயமாத்தமிழினருமையினைநீவிரிக்குந்தகைமைபோல
விக்கலியினினீயெவர்பாற்கேட்டுமனமகிழ்வடைவோமேற்றகீர்த்தி
திக்கனைத்துமுயர்பாண்டித்துரைச்சாமிச்சீமானேசீர்த்தியோனே. (௨)

நீதியினுக்குற்றகளஞ்சியமெனப்பன்னூற்றிரட்டைநிலவச்செய்தாய்
பூதிபான்புகழ்தேறவருஞ்சைவமஞ்சரியைப்புகன்றிட்டாயால்
சேதிமஞ்சூழ்தென்றுறைசைச்சிவஞானமுனிவரன்றுட்செபிக்கவல்ல
தீதில்குணத்துயர்பாண்டித்துரைச்சாமிச்சீமானேசீர்மையோனே. (௩)

முகமுனிவுசிறிதேனுமின்றிப்புன்சிரிப்புடனேமொழியினிக்க
வகமகிழ்வோடருகில்வரும்பெரும்புலவர்தமைக்காணிலளவளாவித்
தகவாகவேயவர்கள்வேண்டுகோளினைக்கேட்டுத்தயவாக்காக்குஞ்
சகமகிழுமுயர்பாண்டித்துரைச்சாமிச்சீமானேசழக்கில்லோனே. (௪)

ஆங்காங்குச்சற்சைவசபையினர்கள்விரும்புவணமன்பிற்சென்று
பாங்குபெறவக்ராசனாதிபதியாயிருந்துபண்பிற்பேசி
நீங்கரியவைதிகசுத்தாத்துவிதசித்தாந்தநிலைமைகூறு [ரே.
மோங்குபுகழுயர்பாண்டித்துரைச்சாமிவருத்தமதையொழிப்பார்யா

தமிழ்கமழுந்தேயமனைத்தினுமழகுமிகவாய்ந்ததக்கநின்பேர்
கமழவளர்ந்தனையீகைதயைசாந்தநனிசீலங்கருணையுற்றே
யமிழ்தனையகவிபாடிப்புலவர்மனமகிழ்வித்தோயரியசைவ [யே. (௬)
சமயமுறுமுயர்பாண்டித்துரைநினைக்காண்குவதெந்நாள்சாற்றுவா

84

திருச்சி, S. P. G. கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர்

மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவமிகுதமிழ்ப்பைங்கூழ்வளர்த்தருள்பாண்டித்துரைப்பேர்ச்
செழுங்கொண்மூத்தான், மருவுதரணியிலுள்ளமாந்தர்கடந்தவுர்ப்பாக்
யவன்காறள்ள, விருவிசும்பிற்கரந்ததுவால்விளைபலனையெதிர்நோக்கி
யினிதிற்காத்த, வருமையுறுபுலனுழுதுண்மாரினியென்செய்வரெனவ
றிந்திடோமே. (க)

மன்னவபாண்டித்துரையேவளர்கருணைக்கொருமுதலேவறியோர்
வாழ்வே, கன்னவிலுந்திரடோளாய்கலைக்கடலேதமிழ்க்கிழவோய்கரு
தாரேறே, யிந்நிலத்தினகன்றனை நீயாங்கொளித்தாயிதுதகுமோமுறை
யோவெந்தாய், மன்னுயிர்களுறுமலக்கணறிதியெனின்வருகவினிவள்
ளால்வள்ளால். (உ)

முந்தைநாட்டமிழ்வளர்த்தபாண்டியர்களோருருவாய்முளைத்தாற்போ
வந்தருளிக்கூடலின்கட்டமிழ்ச்சங்கநிறுவியநின்மகிமையெண்ணிச் [ல
சந்ததமுமினைகேமோதேன்மாரியெனச்சொல்பிரசங்கந்தனைச்
சிந்தைநினைந்தினைகேமோசீர்மைநினைந்தினைகேமோதெளிகிலோமே.

அன்னமளித்தாய்பலருக்காடையளித்தாய்பலருக்களவிலாத [நா
சொன்னமளித்தாய்கலையின்றுறையளித்தாய்பலப்பலர்க்குத்தூயசெந்
மன்னமறையோதிமத்திற்களித்தகலந்தனையளித்தாய்வனசமேலோட்
கின்னமளித்தாய்பலவுமின்னனுமின்றளித்தாயாலென்னேயென்னே.

தந்தைமகற்காற்றுமெனுந்திருக்குறளுக்கெடுத்தியம்பத்தகுகாட்
டாய,நந்தைபொன்னுச்சாமிநரேந்திரற்காணவிழைந்தேயோநுதிகொ
ள்வேற்கைக், கந்தனிகர்பாற்கரப்பேரரசினைக்காண்டற்கேயோககனஞ்
சார்ந்தா, யிந்திரன்வந்தெதிர்முகமன்வழங்கியுபசரித்தனனோவியம்பு
வாயே. (5)

மண்ணிரங்கமலையிரங்கப்புனலிரங்கத்தீயிரங்கவளியினோடு
விண்ணிரங்கமரம்புள்விலங்கிவையிரங்கமேதகுகோளிரங்கநாளோ

டெண்ணிரங்கவெழுத்திரங்கவிசையிரங்கப்பிறகலையுமிரங்கயார்க்குங்
கண்ணிரங்கக்கருத்திரங்கச்சென்றனையால்மன்னநின்கருணையீதே. ()

அம்போதியெனவிரிந்துகிடந்ததமிழ்ப்பனுவலெலாமறிவினுய்ந்தே
யெம்போல்வார்மகிழ்தரப்பன்னூற்றிரட்டென்றியலமுதுமிறைவற்கா
செம்போதந்தருசைவமஞ்சரியும்பிறநூலுந்திகழத்தந்தான் [னுஞ்
வம்போதியென்னவன்றன்பெருமையினையெவராலும்வகுக்கொணுதெ

மதராஸ் பியர் ஆபீஸ் பென்ஷன் டிராபிக் ஓவர்சீயராகிய

போரூர்-முனிசாமிமுதலியாரவர்கள் பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தமிழுலகின்சிரமகுடமெனமிளிருமதுரைநகர்தன்னிலான்றே
ரமிழ்தெனமுன்றுபித்தநற்சங்கவமைதியைப்போலத்தலத்தே
யிமிழ்தரவோர்நற்சங்கமியற்றியுலவிடச்செய்தவினிமையோனே[யே.
கமழ்தருநற்புகழ்சேர்பாண்டித்துரையாந்தேவவெவண்கரந்திட்டா

பாமணக்கும்பாவாணர்பல்லோர்க்குநல்விருந்தாப்பாரினேங்க
நாமணக்குநன்னூலாம்பன்னூலின்றிரட்டதனைநலக்கத்தந்த
தேமணக்குஞ்சோலைசெறிபாலவனத்தம்பாண்டித்துரையேநீஞ்சொற்
றாமணக்கும்பிரசங்கஞ்செயுந்திறத்தைமறந்தெங்ஙன்றேடர்ந்திட்டா
[யால். (உ)

இருட்குழியாம்பிறக்கையினின்றெவருமோர்ந்திடவுய்வானெண்
ணிஞானத், தெருட்பொலியுஞ்சைவமஞ்சரியளித்ததன்றிநலந்திகழ்க
ல்லூரி, யருட்பெருகும்புத்தகசாலையுமமைத்தசற்குணனேயவனிதன்
னில், வெருட்சியினிற்புகழதனையிருத்தியெங்ஙனமகன்றுய்விள்ளுவா
யால். (௩)

செந்தமிழ்மாமடந்தையுளந்திகிலடையக்கவிவாணர்திடுக்கிட்டேங்க
வந்தமில்சீர்நற்பாண்டித்துரையேயிவ்வுலகநலனறவொழித்தே
சந்தமுறுமாலவாயரனடிக்கீழ்ச்சார்ந்தனையாற்றரணிதன்னில்
விந்தையுறுகின்பிரிவுக்காரிரங்கார்தமிழறிந்தோர்விளம்பாயையா. (௪)

---

*தூத்துக்குடி சைவசித்தாந்தசபை உப அக்கிராசனாதிபதியும்

சைவப்பிரசாரகருமாகிய

பொ. முத்தையபிள்ளையவர்கள்

பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருவளர்தென்னாடுபுரிதவப்பயனாற்றிருவாலவாயின்முன்னா
ளருளுருவாஞ்சோமசுந்தரக்கடவுள்பாண்டியனாயரசுசெய்தே
பெருகுதமிழ்மாதை வளர்த்தான்பின்னரிந்நாளிற்பிறங்குமன்னான்
கருணையினால்வேந்தர்குலத்தோரறிவன்முகவைவயினிற்காணவந்தான்

அன்னவன்பாண்டித்துரைச்சாமிப்பெயரோன்சிவபத்தியடியார்பத்தி
தன்னின்மிகப்பெரியவனாய்ச்செல்வநிறைவுடையவனாய்த்தரணியாளு
மன்னவனாய்வாழுநாட்டிருவருளாற்றமிழ்மாதைவளர்க்கவெண்ணித்
தென்னிறைமாமதுரையினிற்றமிழ்ச்சங்கந்தாபித்தான்சீர்த்தியோங்க.

அரசியலாற்கல்வியினாற் கொடையினாற் பெருமைமிகவமைந்தவ
ன்னான், பெருமைமிகு கைலைதனின் மூவேந்தர்தமிற்சோன்பேசிப்
பெற்ற, வொருபெருமைசெந்தமிழ்நாடுற்றிடவோசிவஞானவொளி
யிலென்றும், பிரிவறத்தானிருந்திடவோவெமையகன்றானிவன்போல
ப்பிறந்தோர்யாரே. (௩)

இளங்காடு நற்றமிழ்ச் சங்கத்தார் கூடிய அநுதாபக்
கூட்டத்திற் படிக்கப்பட்டவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நன்னிலத்திற்பல்வளமுநனிசிறந்தநான்மாடக்கூடலென்னச் [டற்குப்
சொன்னிலத்தினியற்றுதமிழ்ச்சங்கநிலைபெறப்பொருளைத்தொகுத்தி

---

* இவை, தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் இருபத்தெட்டாவதா ண்டு நிறைவுக்கொண்டாட்டத்து முதனாளிற் சபையாரும் அக்கிராசனாதிப தியுங் காட்டிய அநுதாபசமையத்திற் படிக்கப்பட்டன.

பொன்னிலத்தினுற்றனைகொறந்தைபொன்னுச்சாமியிடம்புகுந்தாய்
கொல்லோ, வென்னினைத்தோவென்றறியேனெழிற்பாண்டித்துரைச்
சாமியிறைவரேறே. (க)

மானேறுங்கரதலத்தான்றன்சொருபவிலக்கணத்தைவகுத்துப்பாரிற்
றூனேறும்பக்குவர்க்குப்பன்முறையும்புகட்டியநின்றகுதியோர்ந்து
தேனூறுபதமடைத்தகீடமதைத்தனதுருவாச்செய்யுமாபோல் [ல்.
வானேற்றித்தன்னுருவம்வழங்கினனோதென்பாண்டிவள்ளால்வள்ளா

மன்னவநீதமிழ்ச்சங்கம்வளரவொன்பான்வருடவிழாவயங்கத்தஞ்
சை, தன்னினடத்தியஞான்றுதென்னவன்பெண்சென்னிக்கேதகுதி
யென்று, பன்னித்தான்வளர்த்ததமிழ்க்கன்னியையித்தஞ்சையிலேபரி
வாயீந்தே, னின்னுமெற்குப்பாத்தியமுமிலையெனச்சொற்பலித்ததோ
வேந்தாலேந்தால். (௩)

அன்றுபகைகொண்டதனுற் றன்முடியில்வளையோச்சியடர்த்தா
னுக்ர, னென்றவொருபாண்டியனேயவனெழிந்தான்மரபொழிந்ததெ
ன்றுவாழ்ந்தே, மின்றொருபாண்டியன்வந்தானிவற்பகையாதுறவாக்
கியிவையேமென்னச், சென்றழைத்துக்கொண்டனனோதன்னாட்டிற்
பொன்னாட்டுத்தேவன்மாதோ. (௪)

என்மக்களிருவரையுமெழிற்பாண்டித்துரைச்சாமியேந்தலேநின்
றன்பக்கல்விடுத்தனனற்றமிழ்கற்கத்தனதுகலாசாலையுற்ற
பன்மக்களொடுமவரைத்தமிழ்ப்புலவராப்புவியிற்பயிற்றியந்தப் [ம்.
பொன்னக்குமிடப்போலிப்புலவரைநற்புலவர்செயப்புகுந்தாய்போலு

சிவதயாவிருத்திகளாடனமுதற்பன்னூன்குஞ்சிதையாதேற்ற
பூவலயப்பெருமானேபுலவசனசேகரனேபொன்னுச்சாமித்
தேவவரோதயனேபாண்டித்துரையேசாமீயேதேவேயென்று
நாவலருமெம்மூர்நற்றமிழ்ச்சங்கத்தருமியாரைநவில்வாரையா. (௬)

வேறு.

மன்னும்விரோதிகிருதாண்டிற்கார்த்திகைமாமதியிற்
பன்னேழ்திவாவினிற்பங்குவாரத்தின்முன்பக்கமதிற்

பன்னுமேகாதசியிற்றேணியிற்றமிழ்ப்பாண்டியன்சென்
றென்னுளினுமுலவாதுறுமுத்திவீடெய்தினனே. (எ)

முருகையக்கவிராயர்.

தஞ்சையைச்சார்ந்த கருந்திட்டைக்குடி வித்யா நிகேதன சபையார் கூடிய அநுதாபக்கூட்டத்திற் படிக்கப்பட்டவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மண்ணாட்டுப் புலவர்சங்கந் தொறுமுன்னே யழைத்ததிபனுக்கு மாண்பால், விண்ணாட்டுப் புலவர்சங்க வதிபதியாய் விளங்கவிவண் விழைந்தாரென்றே, வுண்ணாட்டுமீகைகுணமொழுக்கமெலாமுருவெடுத்திங்குற்றாற்போன்ற, டண்ணாட்டு மொழியுறுபாண் டித்துரையாம் பார்த்திபனே பார்நீத்தாயே. (க)

முன்னுளபன் னூற்றிரட்டி யருளியபாண் டித்துரையாமுதல்வ கேண்மோ, வென்னுயிரேவென்னரசேவென்கண்ணேவெனைப்புரந்த விறையேயென்று, பன்னிவருபுலவர்முதற்பலருமுறு துயரமெல்லாம் பார்த்துநீயே, யுன்னனையவொருதுணையையடையவருள் செய்குவையே யுய்வாரையா. (உ)

ஆவாவாவீதென்னவறக்கடவுள்செயலிருந்தவாறுபூமே
லோவாதேயார்க்குமிதஞ்செய்வோனையுத்தமனையுண்மைநூல்கள்
நாவாலேமிகப்பயின்றுபலர்க்குரைசெய்நாவலனை நானிலத்துப்
பாவாணர்புகழ்பாண்டித்துரைமகிபாவலனைப்பறித்தருனே. (ங)

தந்திரவிற்பன்னதுரந்தாசமுகஞ்சால்பொன்னுச்சாமிபெற்ற
மந்திரவிலாசசபாபதிபாண்டித்துரைஸார்வபௌமன்மாண்பா
ரிந்திரவிமானத்திலுவந்தேறிப்பொன்னுலகமேகினனை
யிந்திரவியுள்ளளவுமிவ்வுலகிலிவன்சீர்த்தியினிதுவாழ்க. (௪)

வி. சாமிநாதபிள்ளை,
காரியதரிசி.

கொத்தமங்கலம்

சி. அ. சி. காசிநாதன்செட்டியாரவர்கள்

பாடியது.

நிலைமண்டிலவாசிரியப்பா.

மன்னவர்திலகராந்தென்னவர்குலத்தர்
முன்னுறவளர்த்ததொன்மொழியரசா
யெம்மொழியினுமிகவினிமைமிக்குடைய
தென்மொழியாயசெந்தமிழ்க்கன்னி
தன்னிலைகலங்கித்தளர்வுறுங்காலைத்
தென்னவர்குலப்பேர்மன்னுரிமைமருவ
முத்தமிழ்ச்சங்கமாமுச்சங்கப்பெய
ரித்தமிழுலகிலியல்பெறமாற்றி
நாற்சங்கப்பெயர்நிலவுறநாட்டியத்
தமிழிளங்கன்னியையியன்மணங்கமழ
வளர்த்துப்பருவம்வயங்கநோக்கிப்
பெருமுடிசூட்டவருமமயந்தனி
லவளைத்தனிவைத்தமரர்நாடுகந்து
பாண்டித்துரைமன்பாண்டித்துரைம
னீண்டெமைப்பிரிந்தவனேகுந்தன்மையை
யென்னென்றுரைக்கேம்யாரொடுநோகேம்
பன்னருங்குறைத்திப்பாருலகுக்கே.

நா. சா. பாங்க். நா. இராமசாமிப் பிள்ளையவர்கள்

பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

எந்நாளுங்கணப்பொழுதிற்படித்தவற்றின்பொருணுணுக்கமினி
துதேரு, மன்னுநீதிரட்டியநற்பன்னூலின்றிரட்டதனைவழுத்துந்தோ
றும், பன்னூலுமொருங்களித்தபாக்கியவானெனநினைத்தேம்பரந்தசீர்
த்தி, நன்னூலாந்திருக்குறட்குன்றனைப்போல்யாருபகதைகணவில்வ
ரந்தோ. (௧)

நல்லாருணலங்கனிந்ததமிழ்புரக்குநல்லிசையோர்நாள்சில்காலம்
பல்லாருந்துயாழுந்தப்பலர்குடிவேரோடுபறிப்பவர்நீள்கால
மல்லாருநிறமமைந்தான்றருமனெனப்பேர்படைத்தானறியகில்லா
னில்லானிந்நீதிதனை நினையாதிக்கொடுந்துயாநிகழ்த்தலொன்றே. (உ)

பணம்படைத்தசிலருடற்குப்பட்டுடுத்திக்கலனணிந்துபார்த்துத் தம்மேன், மணம்படைத்த வாசனைகளுறத்தடவிவாணுள்வீண் மாய்ப்பர்மாதோ, குணம்படைத்த துரையேநீமெய்யுணர்ச்சியினைப்படைத் திக்குவலயத்திற், கணம்படைத்ததமிழ்வளர்த்தாய்கண்பெற்றான்மீண் டிழந்தகாதைகொல்லோ. (ங)

சொன்னாலும்வாய்மணக்குங்கேட்டாலுஞ்செவியினிக்குந்துரை யேநின்பா, தன்னாலுநினைந்தாலுமனமணக்குந்தமிழ்மணந்துதழைக் கச்செய்த, மன்னுவிந் நிலவுலக முனையிழக்க வந்தபெருங் குறைவை யத்தே, பன்னுவாற் புலவர்பலர் பாப்புனைந்து தங்கருத்தைப் பரப்ப லொன்றே. (ச)

கற்றோருக்கினியனவாயுரைக்குமுன்றன்மொழியழகுங்கற்றோரன்றி
மற்றோருங்கேட்டுவப்பப்பிரசங்கமணிமணியாய்வழுத்துமாண்புஞ்
சொற்றோறுநயம்பெருகவங்கதன்றூதுப்படலஞ்சொலுநின்வாயும்
வற்றாதபேரன்புமென்றினியாங்காண்கிற்பேம்வழுதித்தேவே. (ரு)

மதுரைத்தமிழ்ச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையிற்

போதகாசிரியராயிருந்த வித்வான்

சுந்தரேசுவரையரவர்கள் பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முன்பாண்டிவ்வுலகளித்ததமிழ்வேந்தர்மூவருளுமுதன்மைவாய்ந்த
தென்பாண்டிநாட்டரசர்நிறுவியமுச்சங்கமுமுன்சென்றவாகப்
பின்பாண்டில்செய்தவத்தான்மதுரையினனன்காஞ்சங்கம்பிறங்கவைத்த
வென்பாண்டித்துரையன்னையிழக்கவிந்தத்தமிழகஞ்செய்யேகமென் னே. (க)

பல்லாரும்பயன் றுய்க்குஞ்செழுந்தருநீயென்பதையும்பாராணுட்டி
னல்லாருமெல்லாருமுகம்வாடியுளம்வருந்திநைவதோரான்
சொல்லாரும்புலமைநிறைவல்லார்கள்பகரும்வசைச்சொல்லுந்தோரான்
செல்லாருங்கொடைப்பாண்டித்துரையினுயிர்கவர்மறலிசெயருனென்
[னே,

அடுத்தவர்கள் மிடித்துயரைக்கெடுத்துய்ய நன்னிதியமள்ளியள்ளிக், கொடுத்தவர்கள் குடிகாக்குங் குணக்குன்றே தமிழ்வளர்க்குங் கொண்டலேநீ, யெடுத்ததமிழ்ச்சங்கமும்பல்லங்கமுஞ்செந்தமிழ்ப்புலவரினமும்வாட, விடுத்திரக்கமின்றி யெங்குச்சென்றனை பாண்டித்துரைப்பேர்வேந்தர்வேந்தே. (௫)

ஒன்றுமெழினிறைபாண்டித்துரைமகிபாமுகவைநகருள்ளார்யாரும்
நன்றுநிறை நின்சுதனும் மனைவியருஞ்சுற்றமும்பன்னாட்டுளோருந்
துன்றுகலைவாணர்களுந்தமிழணங்குநிலைகலங்கித்துன்பமெய்தி
யென்றுநினைக்காணுவோமென்றலறவிடுத்தொளித்தெங்கேகினையோ.

செல்வர்தாமெனச்செருக்குமரசர்பலருளர்நின்போற்சேர்ந்தார்க்கண்
நல்வரவுகூறிமுகமலர்ந்தில்லையென்னுது நாளுநல்கிப் [டு
பல்வகையவுதவிகளும்புரிந்தளிக்கும்பண்பினரைப்பாரேம்பாரிற்
றெல்வரவாலுயர்பாண்டித்துரைமகிபாவினியிங்குத்தோன்றிடாயோ.

அருங்கலைவினோதனெனப்பலபுலவர்சூழுமுயரவைக்கண்மன்னிக்
கருங்கலையுங்குழைந்துருகச்செயும்பிரசங்கங்கள்பலகளித்துச்செய்தே
மருங்கலையுங்கடலுலகைமகிழ்வித்தாய்வான்புலவர்மதிக்கச்செவ்வாய்
வருங்கலைகள்விரிப்பதற்கோசென்றனைபாண்டித்துரையாம்மதிவல்
லோயே. (௬)

இசைப்புலவர்க்கிருநிதியாயியற்றமிழ்தேர்வாணர்பலரிருந்துவாழு
மசைவில்பெருங்கற்பகமாயவனிக்கோர்கருணைமுகிலாகியெட்டுத்
திசைவரையும்புகழ்நிறையவளர்த்தபாண்டித்துரையித்தேயம்விட்டுத்
தசைவிரவுமுடனீத்தெவ்வுலகடைந்தாயினியிங்குச்சார்ந்திடாயோ. ()

வேளாரும்வடிவழகுமதிமுகமுமினியென்றுவிரும்பிக்காண்பேங்
கேளாரும்வேட்பமொழிந்திடுமினியபிரசங்கமென்றுகேட்பேங்

தாளாருஞ் சங்கத்துன்னுடனிருக்கும் பெருமையென்று சார்வேம் வென்றி,தோளாருந்திறற்பாண்டித்துரைமகிபாவினியிங்குத்தோன்றி டாயோ.

செந்தமிழையவ்வுலகிற்பரப்புதற்கோசிறுவயதிற்றீர்ந்தநின்சீர்த்
தந்தைதனைக் காண்பதற்கோசோதரரைப் பார்ப்பதற்கோசைவத்துன்
சிந்தையுறுபாற்கரவள்ளலேநோக்கவோமருகச்செல்வனாக [போற்
வந்தநடராஜனைக்காண்பதற்கோபாண்டித்துரைநீவானுற்றாயே. (௯)

வெண்பா.

ஆண்டுவிரோதிகிருதாங்கார்த்திகைபன்னேழ்
மூண்டசனிவாரமுற்பக்க—மீண்டுதிதி
பத்தொன்றிரேவதியெம்பாண்டித்துரைமகிபன்
நத்துமரன்சேவடிசேர்நாள். (௧௦)

மதுரைத் தமிழ்ச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை

உபாத்தியாயரும், ஷை கலாசாலையிற் கல்வி கற்றவருமாகிய

பண்டிதர், அ. கோபாலையரவர்கள் பாடியவை.

வெண்பா.

தேனேயனையமொழிசெப்புபாண்டித்துரைக்கோ
மானேயுருப்பெற்றமன்மதனே—யானே
றெரியழல்வண்ணன்பானீயேகிடநின்மேனி
யெரியழலின்பாலேகிற்றே. (௧)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாலவனத்தன்பரவுஞ்சீர்மதுரைத்தமிழ்ச்சங்கத்தலைவா
சாலவனத்தந்தருசெய்கைதனையெந்நாளுநினையாதோய்
கோலவனத்தங்கலர்பூந்தேன்குதிகொண்டோடிக்கழனியிலார்
பாலவனத்தம்பாலிப்பாய்பாண்டித்துரையெங்குற்றாயே. (௨)

வேண்டும்பொருள்கள்வேண்டியவர்வேண்டியாங்கேவிரைந்தளித்துச்
சேண்டங்கெழிலிதனைப்பார்த்துச்சிரிக்குஞ்செங்கையிரண்டுடையா
யீண்டுநமக்கோரதுவலிலையினியென்றேயோபிறிதொன்றே
நீண்டசடையார்நிமலன்பானீயேகினதுமொழிவாயே. (௩)

பத்திக்குவரம்பாம்பாண்டித்துரைக்கோவெனுமுக்ரபாண்டியாநீ
யெத்திக்கும்புகழ்சங்கநிலைநிறுவியெமையெல்லாமிரங்கிக்காத்தாய்
தித்திக்குமொழிபேசிப்பிரசங்கமழைபொழிந்தாய்தேயம்போற்ற
முத்திக்குமாளாஞயினியாரோவுனைநேர்வார்மொழியுங்காலே. (௪)

மதுரைத் தமிழ்ச்சங்கம் சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலை
உபாத்தியாயரும், ஷை கலாசாலையிற் கல்விகற்றவருமாகிய

பாலபண்டிதர், சு. ஹரிஹரையரவர்கள்

பாடியவை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பொன்னுலவுமுகவைநகரவதரித்துப்புகழ்படைத்துப்பொருளாலோங்
நன்னிலைசேர்கல்விநலமுழுமையுநன்குணர்ந்திறைவனளினபாதம் [கி
மன்னுறவேயுளத்திருத்திமகிழ்பாண்டித்துரைவள்ளால்வானைவேண்
யின்னலுடன்பாமிரங்கவேகுவதுமிந்நாளோவிசைத்திடாயே. [டி

பூவுலகிற்கலைமகளும்பூமகளுமோரிடத்திற்பொருந்திவாழ்தல்
நாவலர்களரிதெனவேநவில்வரதுபொய்யாகநாங்கள்காணப்
பாவலர்க்குப்பாவலனாய்ப்பாலவனத்தம்புரந்தபான்மையாலே
காவலர்க்குக்காவலனாய்க்கவினியபாண்டித்துரைநிற்கான்குவோமோ.

பாண்டியர்கள்வளர்த்ததமிழ்மொழிமெலியிற் பாண்டியனேபாலி
ப்பானென், நீண்டுளநாவலவரெலாமியம்பவந்நாவலர்தவத்தாலெழி
லாருக்ர, பாண்டியனுயவதரித்துப்பரன்மதுரைத் தமிழ்ச்சங்கம்பலமா
நாட்டி, யாண்டுபத்து மதியாறு மளித்தருள்பாண்டித்துரைநீ யகன்ற
தென்னே. (௩)

பட்டமரந்தளிர்த்துதவப்பண்ணுபிரசங்கமழைபயிலும்வாக்கால்
நட்டவரும் விட்டவரும் நனிவிரும்பி நன்னெறியைநணுகச்செய்தே
யிட்டமுடன் மதந்தழைக்கப் புகழ்ச்சைவமஞ்சரியு மியற்றியின்னே
நட்டமிடு மடியவன்ருணணுகுதல்பாண்டித்துரைநீ நயந்தாய் கொல்
[லோ.

இன்புறுகுட்டித்திருவாசகத்தினைநீரிசைத்திடுமினென்றேகூறு
மன்புறுபுத்தமுதமொழிநினைந்தோபாண்டித் துரையேயடைந்தோர்க்
கெல்லாம், பொன்பொழியுங்கரநினைந்தோபுவிபுகழும்பொறைநினைந்
தோபுகழார்காம, னென்புருகக்கரைந்துருகுமெழினினைந்தோவெதை
நினைந்திங்கிரங்குவேனே. (ரு)

முன்னமிருந்திறைவனுடன்றமிழ்வளர்த்தமுதியவராமூன்ருஞ்ச
ங்க, மன்னியநற்புலவருக்கின்னமுதளித்தோய்வான்புகழும்வரம்பில்
சீர்த்தி, துன்னுதிருத்தொண்டர்குழாமமர்ந்திருக்கத்துலங்குறுதெற்
காடிவீதி, தன்னிலொருமடஞ்சமைத்துப்பூசைபுரிவித்தவரைச்சார்ந்
தாய்கொல்லோ. (சு)

ஒதுபுகழ்வளர்மதுரைத்தமிழ்ச்சங்கத்துயர்கிளையொன்ருகவோங்குஞ்
சேதுபதிசெந்தமிழ்க்கல்லூரியெனுந்தினகரனைச்சிருட்டித்தெங்கள்
கோதுபதிமனத்திமிரமகற்றியபாண்டித்துரையெங்குணசீமானே
சேதுபதிகுலமணியாம்பாற்கரனைத்தேடிவரச்சென்ருய்கொல்லோ. (எ)

வெண்பா.

விரோதிகிருதாண்டுவிருச்சிகம்பன்னேழிற்
பாரவுதிதிமுற்பக்கப்பன்ஞென்—றிரேவதிமீன்
கூடுந்தினத்தெங்கள்கொற்றவன்பாண்டித்துரைமன்
ருடுஞ்சிவனடிசேர்ந்தான். (அ)

மதுரைத்தமிழ்ச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையிற்
கல்வி கற்ற பாலபண்டிதரும், அமெரிக்கன் மிஷன் ஹைஸ்கூல்
உபாத்தியாயருமாகிய

ப. முத்துச்சாமிக்கவுண்டரவர்கள் பாடியவை.

புல்லறிவேங்கடைத்தேறத்தமிழ்ச்சங்கமொன்றிலகுபொழில்வானீடு
மல்லல்வளநிறைமதுரைமாநகரந்தனினிறுவிமனத்துக்கூரு
மல்லலொழித்திகபரநற்சுகமுதவுகல்விநலனளித்தாய்வானோர் [யே.
செல்லலொழிப்பான்பாண்டித்துரையரசேசென்றனையோ செப்புவா

திங்கண்மரபினிலுதித்துத்தமிழ்வளர்த்திங்கினிதாண்டசெழியரேக
மங்குமினித்தமிழ்மாதிங்காதரிப்பாரில்லையெனமயங்குகாலைச்
சங்கநிதியைந்தருவும்போலநிதிக்குவையுதவித்தழைக்கச்செய்தோய்
பொங்கரவம்பூண்டவன்பாற்புகுந்திடுநாளிந்நாளோபுகன்றிடாயே. ()

பத்திநெறியிதுவென்றுபலமுறையும்பிரசங்கம்பகர்வாயெங்கே
சித்தசன்போலுலவுதிருமேனியெங்கேகார்நிகருஞ்செங்கையெங்கே
யத்தனுறைகோயிற்றுஞ்சலியாமலேகுதிருவடியெங்கேயோ [னே.
எத்திசையும்புகழ்நிறுவுமுக்கிரபாண்டித்துரையெம்மிசைவல்லோ

அன்னையினும்பரிவுமிகுந்திரப்போருக்கிருநிதியமளித்தகோவே
தன்னிகரில்சிவபூசைபுரிபாண்டித்துரையேயைந்தருவார்வானிற்
றுன்னுபுலவோர்புவியிற்றொல்புலவர்க்கொப்பாதல்சோதித்தற்கோ
வுன்னுடனீத்தவண்புகுந்ததென்கருதித்துயர்தீரவுரைத்திடாயே.(௪)

மதுரைத்தமிழ்ச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையிற்
கல்விகற்ற பாலபண்டிதரும், சொக்கலிங்கம்புத்தூர்க்
கலாசாலை யுபாத்தியாயருமாகிய

ரெ. இராமமூர்த்தி ஐயரவர்கள் பாடியவை.

காண்டற்கரியமாமணியேகடல்சூழுலகினினையாரும்
பாண்டித்துரையாந்தேவனெனப்பகர்வாரச்சொற்பொருளறியே
னீண்டித்துணையுமிருந்துசுரரியையுமுலகத்தெய்தியதால்
வேண்டிப்புகுவோர்க்கருள்புரியுங்கையாமெய்யேவிளங்கியதே. (௧)

பூதவுடம்பழிவுளதுபுகழுடம்பேநிலையுளதிப்புவியின்மீதென்
றேதமறப்பேதையருமுணர்வுறநீசென்றனையோவெழில்சேர்வேந்தே
யாதரவாலெமைக்காப்பாரினியெவரென்றறிகில்லோமரசேமீண்டு
போதருவாயோதமிழைவளர்ப்பாயோபுவியாளும்புலவரேறே. (உ)

மனமுருகக்கல்லுருகமரமுருகச்சிறுகுதலைமதலையாருந்
தினமுருகக்கவிவாணர்நினதுதிறந்தெரிந்துருகத்திசைகடோறுஞ் [ய்
சனமுருகநீயொளித்தவிடமறியோமென்செய்வோஞ்சாற்றாய்சாற்றா
வனமுருகனிகர்பாண்டித்துரையேயெவ்வுயிர்க்குமருள்வள்ளியோயே

தாய்மொழியை யாதரித்த லுயர்தரும மிதுவேதஞ் சாற்றுகின்ற,
வாய்மொழியே யாகுமென வுலகறிய வோர்சங்க மதுரை தன்னி,
லாய்மொழியார்புலவரெலாமொருங்கிருந்தேதமிழ்வளர்க்கவமைத்தா
யின்சொற், றாய்மொழிசேர்தொடைப்பனுவலுடைக்குரிசிலெமைத்
துறக்குந்துணிபென்னேயோ. (ச)

சங்கத்தான்முகந்துதமிழ்த்தீம்பாலையூட்டுகின்றதாய்நீயன்றோ
வெங்குற்றாயெங்குற்றாயெனக்கதறுவேனென்றிருக்கலாமோ, மங்
குற்கார் நிகர்கொடையா யெளியரது துயரினுக்கோர் மருந்தேபோல்
வாய், துங்கத்தாரணிபாண்டித்துரையரசே யென்செய்வோஞ் சொல்
லாய்சொல்லாய். (ரு)

உண்டிகொடுத்தோருலகிலுயிர்கொடுத்தோரெனப்புகல்வரொளி
சேர்மேலோர், தெண்டிரைசூழ்ஞாலமிசையமுதமுடையுறையுள்பல
சிறப்புவாய்ந்த, தண்டமிழ்நூன்முதலியனவுதவுநினையெவ்வாறுசாற்
றுநிற்பே, மெண்டிசையும்புகழ்பாண்டித்துரையரசேசற்றேவந்தியம்பு
வாயே. (சா)

மண்ணாட்டுப்புலவருக்குப்பரிசின்முதலியனவெலாம்வழங்கிநின்
றே, விண்ணாட்டுப் புலவருக்குமுதவுவதேகடமையென விரைந்தாய்
கொல்லோ, கண்ணாட்டுமஞ்சனத்தாலுடல்குளித்துமனதுமிகக்கரை
ந்துசோர்ந்தே,பெண்ணாட்டுவாழ்வையெலாந்துறந்தனநிற்பிரிந்ததுய
ரென்னேயென்னே. (எ)

அருட்டிறம்பகருகேமாவழகுசேர்வாக்கினுற்சொல்
பொருட்டிறம்புகலுகேமாபுவியிடையெம்போல்வார்க்கு

மருட்டிறநீக்குகின்றவள்ளன்மைவழுத்துகேமா
தெருட்டிறம்பூண்டபாண்டித்துரையேயாஞ்செய்வதென்னே. (அ)

பலபன்னியழுதாலும்பாரினிடைவீழ்ந்தாலும்பதைத்துச்சோர்ந்து
நலமன்னுமுடலுருகப்பெற்றாலுந்துன்பினுக்குநலிவேயில்லை
குலமன்னிநின்றநினதருளறிவுபொறையிவற்றைக்குறிக்குந்தோறும்
வலமன்னுமுயர்பாண்டித்துரையேயின்னற்பெருக்கேமன்னுமாலோ.

மதுரைத்தமிழ்ச்சங்கம் சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலையிற்
கல்விகற்ற பாலபண்டிதரும், புதுக்கோட்டைமகாராஜா
கலாசாலை உபாத்தியாயருமாகிய

தி. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் பாடியவை.

அன்னையென்றனையழைக்குமாதுலர்களின்றுமுதலாரைப்பா
ர்த்துப், பொன்னீவாய்பொருளீவாய்புவியீவாய்புகழ்பெறுநற்போத
மீவாய், பன்னூலின்றிரட்டீவாயுண்டியுடையீவையெனப்பகர்வார்
வள்ளால், மன்னேபாண்டித்துரையே வான்புலவ ரவாத் தீர்ப்பான்
மனம்வைத்தாயோ. (க)

நீதியிலுஞ்சமயநெறிநிலைநாட்டுமுறைதனிலுநேர்ந்தோர்தம்மை
யாதரித்துமுகமனுரையாடலினுஞ்சொல்வன்மையமிர்தமூட்டுஞ்
சாதுரியத்தன்மையினுஞ்சாத்திரவாராய்ச்சியினுந்தக்கோய்நின்னை
மீதலத்தார்விரும்பினரோ பூதலத்தோர்நினைத்திரங்க மேற்சென்றா
[யே.

முன்னாட்செந்தமிழ்ச்சங்கந்தமுடத்திருமாறன்முதல்வனென்ன
விந்நாட்செந்தமிழ்ச்சங்கமினிதளித்துத்தலைமைவகித்தேற்றசீர்த்தித்
தென்னாட்டில்வடநாட்டிற்குடநாட்டிற்குணநாட்டிற்றிரைசூழ்வைப்பி
லென்னாட்டுமிசைத்தநவையிவணாட்டியாமேங்கவெங்குற்றாயோ. ()

சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலைதனைவிரும்பிச்சேர்ந்துநாளு
மோதுதமிழ்மாணவருக்குணவுடுக்கைபுத்தகங்களுதவித்தாய்போ
லாதரவுபுரியுநினதன்புடைமையென்பகர்வோமந்தோவிந்த
மேதினியினீபிரிந்துவெந்துயர்தந்திடன்முறையோவிளம்புறாயே. (ச)

மதுரைத்தமிழ்ச்சங்கம் சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலையிற் கல்விகற்ற பிரவேசபண்டிதரும், அழகன்குளம் கலாசாலையுபாத்தியாயருமாகிய

புன்னைவன முதலியாரவர்கள் பாடியவை.

பண்ணியல்சேர் தமிழணங்கைப்பண்டுபாண்டியர்வளர்த்தபான்மை போல, நண்ணியசீர்மிகுபுலமையுறுபாண்டித்துரையரசேநாளுநின்றன், கண்ணிணைபோன் மிகவிரும்பித்தமிழ்ச்சங்கம்வைத்துநன்குகாத் தாயிந்நாட், புண்ணியனீமறைந்ததனுல்வெயிற்புழுப்போற்றவிக்கின் ரேம்புவியின்மீதே. (க)

கன்னன்மொழிக்குருகுவமோகலைநலத்திற்குருகுவமோகற்றோர் போற்றுங், தென்னன்மொழிவளர்சங்கச்சிறப்புநினைந்துருகுவமோ சிமானேநீ, பன்னருஞ்சீர்வாய்ந்ததமிழ்வளர்த்ததற்காவுருகுவமோ பாராள்வேந்தே, யென்னநினைந்தெதற்கிரங்கியிருநிலத்தில்யாந்தளர் வேமிசைத்திடாயே. (உ)

மதுரைத்தமிழ்ச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலையிற்

கல்வி பயின்ற பாலபண்டிதர்

கந்தசாமியார் பாடியவை.

திருமகளுறையுங்கூடன்மாநகரிற்செந்தமிழ்ச்சங்கம்வைத்ததனி லொருவுறுப்புலவர்தமக்குமுன்னிறையாயுற்றநீவானநாடேகிப் [ய் பொருவிலாத்தமிழின்சங்கமுநிறுவிப்பொன்னகர்ப்புலவர்க்குமிறையா மருவவோவுயர்பாண்டித்துரைசென்றாய்மன்னியவெங்களையகன்றே.()

வேறு.

பொன்னிருக்குங்கரதலத்தாய்புவிதாங்குந்திருத்தோளாய்புலவரேறே பன்னிருக்குமறைமுடிவாஞ்சித்தாந்தமுணர்ந்தோய்தாய்ப்பசுவைநீத் துப், பின்னிருக்குங்கன்றுகள்போல்யாங்களெலாமழுதிரங்கப்பிரிந்த தென்னே, கொன்னிருக்கும்வேற்கரபாண்டித்துரையெங்கோமானே கூறுவாயே. (உ)

வேறு.

சைவமணியே தவமணியே சங்கம்வளர்த்த தனிமணியே
தெய்வமணியே சிராஜதிலகமணியே தமிழ்ப்புலவ
ருய்யவுதித்த வொருமணியே யுமையோர்பாகன் கழலிணையை
யெய்துங்காலமிதுவேயோ விசையாய்பாண்டித்துரைமணியே. (௩)

வேறு.

இத்தரையிற் றமிழேங்க வெழிலாருஞ்சித் தாந்தசைவமேங்க
வுத்தமர்கள் குலமேங்க வொண்புலவர் தனியேங்க வொளிசேர் நீறும்
பத்தியுறு கண்டிகையு மணிந்துவிதிப்படி பூசைபண்ணியிந்நா
ளத்தியுரியரனடியையடைந்தனை பாண்டித்துரையேயருட்கோமானே.

கல்லுருக மரமுருகக் கல்லாதார் மனமுருகக் கழகந்தன்னிற்
செல்லுருகப் பிரசங்கம்பொழி வாயாலொருமொழியுஞ் செப்பிடாம
லல்லுருக மதியணியு மண்ணலடி நிழலதனி லமர்ந்தாயன்பர் [மானே.
சொல்லுருகல் கண்டிலையே சுவைமுதிருந் தமிழ்ப்பாண்டித்துரைக்கோ

கண்டிகைக்கலனே கலனெனப்பூண்டு கண்ணியநீறுறுவதன
மண்டலவழகுமின்னுரை கூறிவருந்திவந்தவர்க்கருள் காமுங்
கொண்டுவானேகியவனுறு தேவர்குழாத்தினுக்கீகையுமான்பாற்
றெண்டுறுவிதமும் பயிற்றவோ சென்றாய் தூயபாண்டித்துரைக்கோவே.

வேறு.

அன்னையனையாய் பாண்டித்துரையரசே யுடங்கன்முறையருளென்றேற்
பன்னுகுறள் கற்றநினக்கடங்கன்முறையுள ததனைப்பாராய் மீட்டு [குப்
மன்னதனை வேண்டிநின்றாயதனை மறுத்தில்லையெனலழகன்றாமொன்
றின்னதுகொடிருப்பாட்டென்றீந்தனைநின் சாதுரியமியம்பற்பாற்றோ.

முத்தமிழ்தேரிசைப்புலவருறை கூடன்மாநகரின் மூவாவெங்கள்
சித்தநலமுறப்பயிற்றச் செந்தமிழ்க்கல்லூரிநிதீச் சிறப்புச்செய்த
நத்தமருங் காதலத்துநாயகன்போலருளுடையநளினக்கண்ணா [னே.
வித்தரையிலெமைவிடுத்தெங்குற்றனை பாண்டித்துரையாமெங்கோமா

மதுரைத்தமிழ்ச்சங்கம் சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலை
மாணாக்கரும், பிரவேசபண்டிதருமாகிய

திரு. இராமாநுஜையங்கார் பாடியவை.

சேதுபதியரசர்குலக்கடற்றோன்றிச்செந்தமிழாங்கடலினீந்தி
நீதிதெரிபெரியோர்சூழ்தமிழ்ச்சங்கமொன்றுகண்டநிருபனெங்கட்
காதரவாகியபாண்டித்துரைச்சாமிவானடைந்தானன்னைநீங்க
வேதமுறுங்கன்றுகள்போல்வருந்துகின்றோமினியாங்களென்செய்
[வோமே.

மண்ணாட்டுநெறிதேராமாந்தர்பலர்நெறிதேரவழங்குபன்னூ, லுண்ணாட்டுநெறியனைத்துமோர்ந்துபன்னூற்றிரட்டென்னுமொருநூலீந் தாய், பண்ணாட்டுங்கவிபலவும்பகர்பாண்டித்துரையரசேபார்விட்டந்த, விண்ணாட்டும்புலவருக்குப்பரிசளிக்கச்சென்றனையோவிளம்புவாயே.

இத்தலத்திற்சேதுபதிசெந்தமிழ்க்கல்லூரியென்றுமிலகநாட்டிப்
புத்தகமுமாடையுணுமுதலியபல்பொருளளித்துப்பொருவில்கல்வி
வித்தினையெம்பாற்பதித்தவுக்கிரபாண்டித்துரைநீவிண்ணோர்போற்ற
முத்திநிலையடைவதற்குத்தகுங்காலமிதுவேயோமொழிந்திடாயே. ()

வேறு.

நீற்றுநுதலழகெங்கோநிறைகருணைவிழியெங்கோ
மாற்றலருமனமகிழவுரைவழங்கும்வாயெங்கோ
போற்றுமதனுருவமெனுமுடலெங்கோபுயறன்னைச்
சீற்றமொடுதுரந்தவிருகையெங்கோதேர்வேந்தே. (ச)

மதுரைத்தமிழ்ச்சங்கம் சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை
மாணாக்கரும், பிரவேசபண்டிதருமாகிய

ஆ. கார்மேகக்கோனார் பாடியவை.

பற்றுயினார்களாற்றுறந்தார்க்குமுண்டியுடைபலவுமின்றி
யற்றோர்க்குமரும்புலவோர்தமக்குமினிதாந்தமிழென்னணங்கினுக்கு
மற்றோர்க்குமுறுதுணையாமாபாண்டித்துரையேயாமயங்கிவாடச்
சற்றேனுமருளுளத்திற்கொள்ளாதுவான்சேறறகுதியாமோ. (க)

மண்ணாட்டுப்புலவருடன்வீற்றிருந்துதமிழாய்ந்துமகிழ்ந்தநீபோய்
விண்ணாட்டுப்புலவருடனுறைந்துதமிழாய்வதற்குவிழைந்தாய்போலு
முண்ணாட்டுமீகையன்பாலுயர்பாண்டித்துரையரசேயும்பர்வாழ்வ[ல்.
வண்ணாட்டில்வழங்குவதுவடமொழியாமென்பதறிந்திலையோவள்ளா

சீராமகதையமிர்துஞ்சிறப்புறுமின்னுரையமிர்துஞ்சேர்ந்தவாயுங்
காராருங்கொடைக்கரமுமடைதிறந்தாலொத்தவருட்கமலக்கண்ணும்
வாராருந்தனமடவார்மடலெழுதுவனப்புமதிமாண்புமென்று
பாராருமக்களுள்யாரிடைக்காண்பாம்பாண்டியனேபகருவாயே. (௩)

அன்னைபிதாவெனவென்னையாதரித்துக்கல்விநலமமையுமாறே
யன்னமுடன்கலையுதவிக்கலையளித்தவான்பாண்டித்துரையேயந்தோ
பன்னுநலத்தமிழ்க்குழவிதனைப்பரிவோடினிக்காக்கப்பாரின்மீதே
யின்னொருகாலெய்துவையோவின்முகநீகாட்டுவையோவியம்பிடாயே

சேலநகர்த்தமிழபிமானிகள் கூடிய அநுதாபக்கூட்டத்தில்
சேலம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மகா-௱-௱-ஸ்ரீ

டி. எஸ். நடராஜையரவர்கள் பாடியவை.

மதியிழந்தோம் மதியிழந்தோம் அந்தோநம்மதுரைநகர்மன்னு
சங்கப், பதியிழந்தோம் பதியிழந்தோம் தமிழ்மகடன்புகலிடமாய்ப்
பற்றிநின்ற, கதியிழந்தோம் கதியிழந்தோம் எழிற்பாண்டித்துரை
யென்னுங் கண்மணியெங்கள், நிதியிழந்தோம் நிதியிழந்தோம் நினை
யிழந்தோமல்லோம்யாம் நினைக்குங்காலே. (க)

மன்னவரின்மணிவிளக்கேமந்திரிகள்மதிக்கொழுந்தேமதித்தல்
மேவு. பொன்னவரின்பொன்னவனேபுகழுக்கோர்பெரும்புகழேபொ
றுப்பில்வாழு,முன்னவனின்பின்னவனேசுந்தரர்க்குட்சுந்தரனேமுது
மைசான்ற,கன்னலுமே கசக்குமொழி யின்னொருகாற் கேட்டுருகிக்
களித்தலென்றோ. (உ)

பிறந்தாரும் நினைப்போலப்பலநலமுமொருங்கெய்திப் பெருமைபெற்
றே, சிறந்தாருஞ்செந்தமிழும்பெருங்கிளையுந்துயருழந்துசிந்தைமாழ்
கப், பிறிந்தாரும்பிறருளரோபெருந்தகையேநின்பிரிவாம்பீழைதன்
னைத், துறந்தாருந்துறவாரேநினைத்துறந்தாருறு துயரஞ்சொல்லற்பாற்
றோ.

மண்ணிலுறுபுலவருக்குத்தமிழமுதுவிருந்தளித்துமாண்புபெற்றோய்
விண்ணில்வளர்புலவருக்கும்விருந்தளிக்கத்தேவாநீவிண்ணுற்றாயோ
எண்ணரியவவனன்றியோரணுவுமசைதலிலையென்னுமிந்தத் [மாறே.
தண்ணளிசேராப்தமொழியொன்றுகண்டாயெமக்கின்னல்தணிக்கு

சேலநகரம் தமிழபிமானிகள் கூடிய அநுதாபக்கூட்டத்தின்
தீர்மானங்கள்.

SALEM,

6th February, 1912.

A public meeting of the citizens of Salem was held in the Salem College Hall on the 3rd February, 1912, presided over by Mr. S. A. Shutie at which the following Resolutions were adopted.

I. Proposed by Mr. S. Nataraja Iyer and seconded by Mr. T. Audinarayana Chettiar :—

That a Tamil Library be formed in connection with the Salem College to be called the Pandithoraisamy Library to perpetuate the memory of the Late President-Founder of the Madura Tamil Sangam.

Carried unanimously.

II. Resolved that a subscription list be opened and circulated for this purpose.

III. Resolved that the Chairman be authorised to communicate to the family of Mr. Pandithorey Thever and to the Secretaries of the Madura Tamil Sangam the letter of condolence read to the meeting and adopted by them.

Spencer A. SHUTIE,

Chairman.

செந்தமிழ்ச்சங்கச் சீருறு புலவீர்!

> " சந்தனப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
> சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ்
> சங்கப் பலகையுந் தழைத்தினி தோங்கு
> மங்கலப் பாண்டி வளநாடு."

எனப் பல ஆன்றோர்களாற் சிறப்பித்துக் கூறப்படும் பாண்டிய நாட்டின் றலைமை நகராகிய மதுரையம்பதியிற் பல்லாண்டுகளாகப் பாண்டியர்களால் ஆதரிக்கப்பெற்ற முச்சங்கங்கள்போற் றமிழகஞ் செய்த தவப்பயனாற் றம்பெயர்க்கேற்ப நான்காஞ் சங்கமொன்றை நிறுவி அச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்த பெருந் தகை வள்ளலும், கல்விக்கடலின் கரைகண்ட கருந்தனமும், கல்லுங் கனியும்படி இனிமைபெறப் பேசுந்திறனாற் சபையிலுள்ளோரனைவரை யும் பிணிக்கத்தக்க பேராண்மைச் சிங்கமும், சிவபக்தியிற் சிறந்த சீமானும், இரப்போர்க்கினிதளிக்குமெழிற்கொடையாளியும், அழகிய வடிவம் அமையப்பெற்றவரும், தனிப்பாடற்றிரட்டினைத் தமிழுல கிற்குதவிக் கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து இராமநாதபுர மன்னரி டத்து மதிமந்திரியாய் விளங்கிய பொன்னுச்சாமித்தேவரவர்களின் தனிப்புதல்வரும், கலிகாலக் கன்னாவதாரனென்னக் கடலுலகிற் புகழ் வாய்ந்த கல்விக்களஞ்சியமாம் பாஸ்கர சேதுபதி மன்னரின் கண்ணனைய சகோதரரும், 'மகனறிவு தந்தையறிவு' என்னும் அறமொழிக் கேற்பப் பன்னூற்றிரட்டு வெளியிட்ட பாவலரும், சைவர்க்குச் சைவ மஞ்சரி தந்தருளிய சைவசிகாமணியும், பாலவனத்தமென்னும் பதி யின் தலைவரும், என்றென்றைக்குமழியாத புகழுடம்பை இந்நிலவுல கில் நிலைநிறுத்தி நிலையிலாப்பொய்யுடலை நீத்த பெரும்புண்ணியமே திருவுருவாக்கொண்ட மக்களிற் சிறந்தோங்கியவருமாகிய ஸ்ரீமான்-பாண்டித்துரைத் தேவரவர்களின் தேகவியோகத்தானேர்ந்த ஆறாத கழிபெருந்துயரத்தைச், சேலநகர்த் தமிழபிமானிகளாகிய யாங்கள் அனைவரும் இவ்வநுதாபக் கடித வாயிலாய் அதிக வருத்தத்துடன் அறிவிக்கின்றோம். ஆறு தலைக்கொண்ட ஈசன் நம்மெல்லோர்க்கும் ஆறுதலை அளிப்பாராக.

இங்ஙனம்,

துரையின் பிரிவிற்கிரங்கும்,

சேலநகர்த் தமிழபிமானிகள்.

மலையாளம்.

பண்டைக்காலத்துத் தமிழிலக்கணமியற்றிய ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தமிழ்நாட்டெல்லையைக் குறிக்குங்கால் வடக்கு வேங்கடம், தெற்கு குமரி, கிழக்கும் மேற்கும் கடலென்று தெற்றெனக்கூறியுளர். "வடவேங்கடந் தென்குமரியாயிடைத், தமிழ்கூறு நல்லுலகம்" எனப்பனம்பாரனாரும், "நெடியோன் குன்றமுந் தொடியோள்பௌவமுந், தமிழ்வரம்பறுத்த தண்புனனாடு" என இளங்கோவடிகளும், பின்னர் "வடதிசைமருங்கின் வடுகுவரம்பாகத், தென்றிசையுள்ளிட்டெஞ்சியமூன்றும், வரைமருள் புணரியொடு பொருதுகிடந்த, நாட்டியல் வழக்கநான்மையின் கடைக்கண், யாப்பினதிலக்கண மறைகுவன் முறையே" என்று சிறுகாக்கைபாடினியாரும் எல்லைவரையறுத்தனரன்றே. பிற்காலத்துரையாசிரியர்களிற் சேனாவரையர் "செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலத்துந், தங்குறிப்பினவே திசைச்சொற்கிளவி" என்னும் எச்சவியற்சூத்திரத்துள்ள பன்னிருநிலங்களைப் பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை எனவகுத்தார். சேனாவரையர்காலத்திந்நாடுகள் செந்தமிழ்பயிலாத தமிழ்நாடாயினபோலும். மேற்கூறியசூத்திரத்துள் "சேர்ந்த" என்னுமொழிக்கு, "செந்தமிழ்நாட்டினுட்பட்ட" என்றே பொருள் கொள்ளல்வேண்டும். ஏனெனின், சேர, சோழ, பாண்டிய நாட்டிலுள்ள கவிஞர் பாடல்களன்றோ இக்காலத்துச் சங்கச்செய்யுளென்று பெயர் வழங்குநூற்கள்? ஐங்குறுநூறும், சிலப்பதிகாரமும், மற்றும் புறநானூற்றுப்பாக்களிற் சிலவும் மலைநாட்டுப் புலவரியற்றியதனாற் செந்தமிழிலக்கியங்களல்லவென்று விலக்கினருளரோ? காடடர்ந்த மலைகளாற் செந்தமிழ்நாட்டினின்றும் பிரிபட்டுத் தன்வழியே மாறிக் கொண்டுவந்த மலைநாட்டுத்தமிழை இக்காலத்து மலையாளமென்று பெயரிட்டழைக்கின்றனர். திராவிடபாஷைகளைக்குறிக்கும்பொழுது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளமென நான்குபாஷைகளென்பதே வழக்கமாயிருக்கின்றது. மலையாளமென்பது தமிழினின்று எம்மட்டும் மாறுபட்டது, எங்ஙனம் தனிப்பாஷையெனற்பாலது, இலக்

கண விலக்கியங்களுள் எவ்வாறு வேறுபட்டதென்பதை ஆராயாதாரன்றி மற்றவர்கள் அதனைத்தனிப்பாஷை என்னார். ஆகவே மலையாளத்தைத் தமிழ்மொழியென்றே கொள்ளவேண்டும்.

மலையாளமென்னும் பதம் ஒரு நாட்டையும் அதன் பாஷையையும் குறிக்கும் சொல்லாய் இக்காலத்து நடைபெறுகிறது. நாட்டிற்கு இப்பெயர் வந்தது மிகப் பிற்காலத்துப்போலும். பழஞ்சிலாதாமிர சாஸனங்களிலும், தமிழிலக்கியத்தும் இதனை மலைநாடென்றே கூறுவது வழக்கம். "மலைநாட்டுக்கருநந்தடக்கன்," என்று சாஸனங்களிலும், "புதைத்தல், போர்த்தல்; மலைநாட்டுவழக்கு" என்று இலக்கியத்தும் வந்தவற்றைக்காண்க. இப்பதம் 'மலையாளி'யின் நாடும் பாஷையும் குறிப்பதோர் சொல்லாயிற்று. மலையாளி எனினும் மலையாளன் எனினுமொக்கும். "மெய்யமலையாளன்," "கலையிலங்கு மொழியாளர்," "பேராயிரமுடைய பேராளன்," "தண்குடந்தைநகராளா!", "வென்றிச்சிலையாளன்." "வானவர்தம் தலையாளன்," "உருவாளன்,திருவாளன்" என்பன போன்ற மலையாளன்என்னும் சொல். நோயாளன், நோயாளி,...............என்ற விகற்பமொழிகளைப்போல மலையாளியென விகற்பிக்கப்பட்டது. மலையாளன், அல்லது மலையாளியின் நாடு மலையாள மெனப் பிற்காலத்தார் வழங்கத்தொடங்கினர்.* இந்நாட்டாரைப்பழந்தமிழ்ச் சாஸனங்களிலும் இலக்கியங்களிலும், "மலைநாட்டு வியாபாரி குலசேகரதாஸன்" என்பதிற் காண்பதுபோல மலைநாட்டு இன்னான் என்பதே வழக்கு. மலையாளி என்னும் பதம் மிகப் பிற்பட்டதே. இவர்கள் பாஷையிலும், இலக்கணத்திலும், இலக்கியத்திலும் வழக்கு, நடை முதலியவைகளிலும் தமிழரினும் வேறுபட்டவரோ என்று ஆராய்வதவசியம்.

மலையாள பாஷையின் மொழித்தொகையை உற்றுநோக்குங்கால், தமிழல்லாத பதங்களைக்காண்பது மிக அரிது. மலையாள கோசங்களைத்திறந்தவுடன்காணும்பக்கம் ஒன்றிலுள்ள மொழிகளை அடியில் எழுதியுள்ளேன் :—

தேரோட்டம்,

தேர்க்கழல், "குதி(ை)ரகள் கொண்டுவந்ந (=வந்து) கெ.

---

* மலையாளரது நாடு, அல்லது பாஷை ; மாலையாளமெனினும், இவற்றையுடையோன் மலையாளி எனினுமாம்.

(=க)ட்டிச்சமெ(=மை)க்க தேர்க்கழல் பந்தியில்..........."

தேர்க்கிடாவு (=தேர்க்கடவுகின்றவன்)

தேர்கூட்டக(=கை), "தேர் கூட்டுக என்ன(=ற) ருள்செய்து."

தேர்கூட்டம்.

தேர்கோப்பு.

தேர்த்தடம்.

தேறு.

தேறுகை(=தேறிப்போதல்,வலுத்துப்போதல்) "வாக்குகேட்டு வேதன(=ணை) வேறிட்டு (=மாறி, நீங்கி) தேறினார்," "என்ன(=னை) நீ.பேடிக்காதே (=பயப்படாதே), தேறுக மனோஹர," "சதி என்னு(=று) தேறினாள்(=துணிந்தாள்)."

தேறல்(=கள், தேன்முதலிய). "தேவியாம் பூமலரில்தாவுன்னோரானந்த(=தாவுகின்றதோரானந்தம்)த்தேறல் மானஸமாகிய வண்டுண்டுண்டு...." "பைந்தேறல்," "தேறல் விளிப்பித்தால் (=கூவினால்) அழகெழுபுஷ்பகம் அந்நேரம்."

தேற்றம் (=தேறுதல், மனநிலைபெறுதல்). "சொல்லினான் (=சொன்னான்) தேற்றம் வரும்வண்ணம் அம்மெ(=மை)க்கு.

தேற்றுக (=கை) =தேறச்செய்தல்.

தேற்ற=யானை அல்லது பன்றியின்றந்தம்.
"தாராதேவியெ(= யை)பொங்கிச்சு தேற்றமேலே வெ(=வை)ச்சுக்கொண்டு."

தேற்றுமரம், தேற்றும்பரல்(=பரல்போன்ற கொட்டை).

தேவ(=வை); தேவில்ல (=தேவையில்லை).

தேவடியாள், தேவிடியாமகன்

தேவர். "தேவர் இரிக்க (=இருக்க) வெலி (=பலி)க்கல்லி
னெ(னை) தொழேண்ட (=தொழவேண்டிய).........."

தேவாங்கம், தேவாங்கு,

தேவாடி, தெய்யாடி (=தெய்வத்தின் பொருட்டு ஆடுபவன்).

தேவாரம் (=பூஜை). "களியும் (=விளையாட்டும்), தேவார
வும் (=மும்) இங்ஙனேநேரம் தாமஸிச்சு (=தாமதித்து)"

* * * * * *

இச்சொற்களால், மலையாளபாஷை முழுவதும் தமிழாயிருத்தல் நன்கு விளங்கலாம். மலையாள பாஷையில் தமிழ்மொழியல்லாதன சிதைவுறுதலஸம்ஸ்கிருதபதங்களேயன்றி வேறில்லை.

சிலவருடங்களுக்குமுன் கிறிஸ்துமதப்பாதிரியாராகிய டாக்டர் குண்டர்ட் மலையாளதேசத்துக்கு வந்து, அதுகாறும் இலக்கணமென்பதே இல்லாதுகிடந்த அப்பாஷைக்கோரிலக்கணமும், அகராதியுமியற்றித்தந்தனர். இலக்கணமேற்படுமுன்னரே கண்ணச்சப்பணிக்கர், இராமானுஜ எழுத்தச்சன், குஞ்சன்நம்பியார் முதலாகிய கவிகள் சிலவிலக்கியங்களையியற்றியிருந்தனர். இலக்கியத்திற்குறைவில்லாத பாஷைக்கிலக்கணமில்லாதிருந்ததென்னெனின், இலக்கணமில்லாதிருக்கவில்லை, நஞ்செந்தமிழ்நாட்டிலக்கணங்களாகிய தொல்காப்பியம், நன்னூல் முதலியவைகளே இந்நாட்டிலும் நடைபெற்றிருக்கவேண்டும். பின்னர்ப் பிற்காலத்தாராகிய மலையாளிகள் பாஷாபிமானமும், தேசாபிமானமும் பிடித்துத் தமிழென்னும் பெயர்பெற்ற ஒவ்வொன்றையும் இகழத்துணிந்து, தம்முன்னோர் வைத்த மாநிதிகளாகிய சிலப்பதிகாரம், ஐங்குறுநூறு, பொன்வண்ணத்தந்தாதி, பெருமாள் திருமொழியேயல்லாது, கண்ணச்சப்பணிக்கர் கவிகளையும் அந்தோ!, இழந்தனர். அவர்கள் இழவு தமிழர்க்கு விழவாயிற்றே! இன்று ஐம்பெருங்காவியத்திற்சேர்த்துச் சிலப்பதிகாரத்தைத் தம்மிலக்கியமென்று பெருமையுடன் வழங்குகின்றனர். இங்ஙனம் துரபிமானத்

தாலிழந்த மலையாளிகட்கு நற்புத்தி போதிக்கும்வண்ணம் குண்டர்ட் துரையும் இலக்கணம் எழுதவேண்டியதே; நெடுங்காடியார் தம்மிலக்கணத்து உபோற்காதத்தில் குண்டர்ட் ஆசாரியரையும், கார்த்வேட் ஆசாரியாரையும் வணங்கி நூல் எழுதுவான் றொடங்கலும் தக்கதே.

இதுகாறும் யான் பரிசோதித்தவளவில், தமிழ்மொழியில்லாமல் மலையாளமென்னும்பாஷையிலேயே எழுதியபழஞ்சாஸனம் ஒன்றுங்கிடைத்திலது. நடுமலையாளதேசத்தும் தமிழிலன்றி வேறுபாஷையிற் கிடையா. இந்நாட்டாருடைய பழைய கணக்கும், பத்திரங்கள் முதலாயினவும் பெரும்பாலும் தமிழ்ப்பாஷையிலேயே காணப்படுகின்றன. இவை கிடக்க,

மலைநாட்டிற் றமிழினும் வேறான ஒரு பாஷையிருந்திருப்பின், அந்நாட்டு இளங்கோவடிகளும், சேரமான் பெருமாணாயனாரும், குலசேகராழ்வாரும், மற்றைய பலருந் தமிழிற் றங்கவிதைகளையியற்றுவானேன்?. மலையாளகவிதைகளேயென்று மலையாளிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சிற்சில பாட்டுக்களை நந்தமிழபிமானிகள் படித்து உண்மையுணரும்பொருட்டுக் கீழே காட்டப்படுகின்றன :—

மலையாள பாஷையில் மிகப்புராதனமாய்க்கொண்டாடப்பட்டு இன்னம் புஸ்தகரூப அச்சில் வரப்பெறாத உண்ணுநீலிசந்தேசம் என்னும் காவியத்திலிருந்தெடுக்கப்பட்ட பாக்கள் அடியில் வருவன:—

1. மன்றில்ச்செல்வம்பெரியதிருவைம்பாடியில்கூடியாடிக்
கன்றில்கூடித்தெளிவொடுகளிச்சீடுமென்தம்பிரானெ
கன்றேகொண்டுங்கடமழதடுத்தாச்சிமார்வீடுதோறும்
சென்றுப்பால்நைபருகிமருவும்கண்ணனெகைதொழேண்டும்.*

2. மாழெக்கண்ணாள்க்கொருமயிலுண்டங்ஙுபிங்காலோளம்போய்த்
தாழெச்செல்லும்புரிகுழலழிச்சோமல்(?)நில்பொருநேரம்

இதனையே தமிழில் அடியில் வருமாறு எழுதலாம்.

* மன்றிற் செல்வம் பெரிய திருவாயம்பாடியில் கூடியாடிக்
கன்றிற்கூடித்தெளிவொடுகளித்திடுமென்தம்பிரானை
கன்றேகொண்டுங்கடமழைதடுத்தாய்ச்சிமார்வீடுதோறும்
சென்றுப்பால்நெய்பருகிமருவும்கண்ணனைக்கைத்தொழவேண்டும்.

ஊழத்தங்கொண்டிரிள்முகிலிதென்றஞ்சி தாழ பீலிஜாலம்
சூழச்சிந்திச்சுவயுடனேபாடியாடிடுவொன்று.*

3. ஊபல்ப்பூமெத்தயில்மருவுமக்கண்ணனுமுண்ணிதன்னெத்
தாலோலிச்சும்தழுகியுமுடன்னின்றுவைகாதவண்ணம்
வ-ஙிஙா ழு௦கொண்டணிமதிதொடும்வாதில்மாடம்புறப்பெட்
டார்ய ஷயமிவ வலத்திட்டு நீகும்பிடம்பில்.†

3. என்றீவண்ணம் ஜஜ நினவு நீ சொல்லினல் மிக்கவாறும்
குன்றும்கன்றும்கலயுமகலும்பேடமான்கண்ணிதன்னெ
சென்றும் காண்கேன்........ ‡

4. மாறடிக்கீழ் மருவலர் பிணங்கொண்டு நாய்க்கும் நரிக்கும்
சோறடிக்கும் மனுஜவரனே!

5. சொல்லார் குளிர்ம வளரும் பேர்முலக் குன்றிரண்டும் $

6. பாலுஞ்சாலப்பருகி......

7. ஊடிக்கூடிக்கனமளிக்குலம்சேர்ங்பூங்காவுதோறும்
கூடக்கூடத்துடுதுடமலர்த்தென்றல்பெய்தொருநேரம்
ஆடிக்கொண்டல்ப்பெருமழையிதென்றிங்ஙினேகல்லியித்வா
வேடக்காலத்தழகொடுமயில்கூட்டமாடீடுமெடம் ¶

---

* மாழைக்கண்ணுட்கொருமயிலுண்டு; அங்கு பின்காலோளம் (=பின் கால்வரையும்) போய்த்—
தாழச்செல்லும் புரிகுழலழித்து.......நிற்குமோர் நேரம்
ஊழ்த்தங் கொண்டு இருள் முகிலிதென்றஞ்சி தாழ பீலிஜாலம்.
சூழச்சிந்திச் சுவையுடனே பாடியாடிடுமொன்று.

† ஊசற்பூமெத்தையில் மருவுமக்கண்ணனும் உண்ணி(=சிறுவன்)தன்னைத்—
தாலோலித்தும் தழுவியுமுடன் நின்று வைகாதவண்ணம்
சூடாக்கிரம் (வ-ஙிஙா ழு௦) கொண்டணிமதி தொடும்வாயில் புறப்—
பட்டார்ய! ஷயமிவ வைத்திட்டு நீ கும்பிடு அன்பில்.

‡ என்றிவ்வண்ணம் என் நினைவு நீ சொன்னால் மிக்கவாறும்
குன்றும்கன்றும்கலையுமகலும்பேடைமான்கண்ணிதன்னைச்
சென்றும் காண்கேன்.

$ சொல்லார்குளிர்மை(குளிர்ச்சி) வளரும்போர் முலைக்குன்றிரண்டும்.

¶ சேர்ங்ங=சேர்ந்த; இங்ஙினே=இங்ஙனே;

8. பொற்பூமாதின்குளிரிளமுல(=முலை).

9. வாமஷ்த்ரீணும் முலயில் மலியும் குங்குமச்சாறுசேருய்
சாலப்பெண்ணும் கமலகலிகம் ஸ்ரீ உதீசெபௌலக நூ)ா
மாலக்காலத்தளிகள் தெளிவாய் சும்பிநோராம்பல்வன்புற்
றேறுலுங்கோலுப்பவனனேடுடன்சேர்ந்நுமேவிடுமெடம். *

10. உத்தேஹாநாம் வளர்செவிகளாலவட்டங்கள் கொண்ரும்
நெச்சேந்திடும்உ ரசஶகுதிரவாலாயவெஞ்சாமரைஸ்ஞு. †

11. அங்ஙுநேரேநடந்நால்பின்பில்க்காணும்
வயஸிகரியநாடென்ன பேராயகாவு ‡

12. கண்டம் வண்டின்னிறமுடயனெகங்கநீரோடு திங்கள்த்
துண்டம்சார்த்தும்பரனெவரமாதின்னுமைபாதியோனெ
மண்டும்மானேல்கரனெயரனெகும்பிபாம்பாக்கியோனெக்
கண்டேபோவான்தரமவிடநீகண்டியூர்த்தம்பிரானெ. $

13. ஆனத்தோலோகொடியவிஷமோவெள்ளெலிம்போ
மானேமீனஜ்ஜசுடலயாம்கண்ணிலார்க்கின்றதீயோ
நீரேவேறேபறகில்மலமாதின்னுனிம்மைமகனக்க
கூறுவானென்றினியததுசொல்லுதுஸீதாம்பரளளமே ¶

ஆடிடுமெடம்=ஆடிடுமிடம்.

* முலயில்=முலையில்; மாலக்காலம்=மாலைக்காலம்; மேவிடுமெடம்=மேவிடுமிடம்.

† நெச்சேந்திடும்= ; குதிர=குதிரை; வெஞ்சாமரை=வெண்சாமரை.

‡ அங்ஙு=அங்கு; நடந்நால்=நடந்தால்; நாடென்ன=நாடென்று; காவு=கா.

$ கண்டம்வண்டின்னிறமுடையனைக்கங்கைநீரோடுதிங்கள்
துண்டஞ்சார்த்தும்பரனைவரைமாதின்னுமைபாதியோனை
மண்டும்மானேல்கரனையரனைக்கும்பிபாம்பாக்கியோனைக்
கண்டேபோவான்தரமவ்விடம்நீகண்டியூர்த்தம்பிரானை.

¶ ஆன=ஆனை; வெள்ளெலிம்பு=வெள்ளெலும்பு; சுடலயாம்=சுடலையாம்; பறகில்=பறைகில்; மலமாது=மலைமாது.

14. மாற்றேறும்நல்கனககலசம்வென்றபோர்கொங்கதாங்ஙி
காற்றொடாடும்நளினமிழியாள்போந்நுநின்முன்பில்வந்நு
கோல்தேனோலும்மொழிசெறிதுரைகூட்டெத்திநின்னெப்
போற்றீவைகிச்சருளுகிலினிக்கொட்டும்வல்லாய்மசால *

இனி மற்றைய கவிகளுள் சிலர் வாக்குக்களை அடியில் வரைவேன்:—

அடக்கஞ்சேர்முனிவர், அடையலருடன் பொடிசெய்து, இடியொலி அடிபட ஆர்த்தனன், அகத்துபுக்கமனிதன்மேல்அமிழ்ந்தவன், கொன்ன (கொன்றை) சூடுமரன், ஆவிதெளிந்தேகினான், என்பனபோன்ற நல்லசெந்தமிழ்வாக்குகளையுபயோகித்திருத்தல் காண்க.

இக் காலத்துள்ள மலையாள கவிகளின் கவனங்களும் பெரும்பாலும் தமிழாயிருத்தல் அடியில் வருமாற்றான் விளங்கும் :—

விண்ணோர்க்கும் திரியாத்ததாயபொருளாய்
காணாத்ததாய்க்கண்டதா
யெண்ணீடுந்நொருமண்ணுதொட்டுபலதும்
தாந்தன்னேயாய்தங்கலாய்
எண்ணீடானொருஸம்வ்யாயஸமவன்!
யஜ்ஞஸ்வரூபம்திரிச்
செண்ணீடானருதாத்ததாயொருஸவானென்
னெத்துணச்சீடணம்.

இப்பாட்டு, கிருஷ்ணன் எம்பிராந்திரி என்பவராற் பாடப்பட்டது.

இப்பொழுது கொடுங்கோளூரில் வசிக்கும் குஞ்சுக்குட்டன் தம்பிரானென்பவர், “துண்டீரநாட்டில் கவிதை விளைவு தாராளமுண்டின்னுமல்லோ,” “பைந்நறுந்தேன்குடிச்சு,”

மேலாய்த்தேன்மாவுதோறும்புதுமலர்முலையும்
நின்னையும்கண்டுவீ(மீ)ண்டும்
வாவாஶோகங்களில்ச்சேவடிதருணிகளோங்
கிச்சவிட்டுந்ந(=கின்ற)மூலம்

சேலார்ந்நே(=ந்தே)ற்றம்செவிகொடுத்தொருஸ்வ
முதகும்(=வும்)கால்ச்சிலம்பொச்ச(=ஓசை)யாலாப்
பாலார்வக்கத்தணிப்பூவனநிரஸாஸம்
சப்தமார்ந்நி(=ந்தி)ட்டிரிக்கும்(=ருக்கும்),

"அளிநிரையயரும்," "காணுமங்கை(=கே)க்குச்சென்னுலவ் விடை வநிதைமார்," "வேறுபட்டுழலுமோரிவனே சுத்தவாயாடி," "பூந்தளிர்ப்பாடிடையில்மறையுமாகோகிலப்பேடையே," "ஐந்தம்பனுகிய காமன் தம்பிரான்," "திண்ணம், நற்செம்பருத்திக்கெதிரதரம்," "பூபறிப்பான் தரளவிழிமணித்தையலாள் உன்னிடும்போது", "சூடேறும்வேனல்நாளும் முழுமதிமுகியாள்வந்து முங்கிக்குளிக்கும்", "மின்னும் பொன்னம்பலத்தின்னகமழகிய", "நன்னுய்(=ருய்) முழங்கும் முரசரவமெழும்".

"காலேபோய்மண்டபததூணின்மரதகவன்
கல்லுபற்றிச்சிரிக்கும்
போலே பக்ஷீந்திர ! பார்சுவத்ததிக மழகொடும்
நில்க்குமங்கை(=கே)க்குகாணும்
சேலேறும்மாறுவெள்ளப்பனிமல(=லே)
முகளி(=டி)ல் காளமேகங்கணக்கேச்
சாலேநாகேந்திரமெத்த(=தை)ப்புறமதிலருளும்
பத்மநாபஸ்வரூபம்."

இவைபோன்ற வாக்குக்களைப்பிரயோகித்தெழுதுகிருர். எனவே, இற்றைக்கும், நந்தமிழ்நாட்டில் வழக்கில்லாமலிறந்த பல பதங்களை யுஞ்சாமானிய பாஷையிலும், கவிதைகளிலும் பயிலுகின்றனர். சிலப்பதிகாரக்காலத்தானொருவன் இக்காலத்துச் செந்தமிழ்நாடாகிய மதுரை, தஞ்சாவூர் முதலிய விடங்களிற் செல்வானேல் தன்பாஷையின் நிலையை நன்கு மதியான் ; ஆயின் மலைநாட்டில் அக்காலத்து மொழிகள் இன்னமும் மிகுதியாக வழங்கிவருவதைக்கண்டு இதுவே செந்தமிழ்நாடென்றும், பலவாறுகமொழிகள் சிதைவுற்றனவென்றும் நினைப்பானேயன்றி, மொழிகள்பலவும் வழக்கற்றிறந்துபட்டனவென்று வருந்தானென்பது திண்ணம்.

இம்மலைநாட்டார் ஆதிகாலந்தொடங்கி எழுதிவந்த எழுத்துக்களை உற்றுநோக்குமிடத்து பாண்டிநாட்டில் வழங்கிவந்த வட்டெழுத்துக் களைச் சில நூற்றாண்டுகட்குமுன்னர், ஆரியவெழுத்து என்னப் படும் கிரந்தாக்ஷரத்தைத்தழுவி வழங்கியவாறே இன்றைக்கும் வழங் குகின்றமை நன்குவிளங்கும்.

பின்னும் இவர்களுடையஆசாரம், முதலியவற்றைநோக்கின் இவ ரே பழந்தமிழர்களில் மிகுந்துநின்றவர்க ளென்னவேண்டும். அகப் பொருட்காரராகிய தொல்காப்பியனார், இறையனார் முதலியோர்தமிழ் நாட்டுக்குரிய மணம், காந்தர்வத்தோடொக்குமென்றபடியே இற் றைக்கும் நடைபெற்றுவரும் நாடு மலைநாடே. வேலன்வெறியாட்டு, குரவை, குருதிகொடுத்தல், சாக்கையனாட்டம், "விழவுமலிமூதூர் வீதி"யினும் "மன்ற"த்தினும் "பழமணன் மாற்று"தலும், "புது மணற்பரப்பு"தலும், முதலிய வழக்கங்கள் பண்டே தமிழ்நாட்டினி றந்தன. அவை யின்றும் மலைநாட்டில் நடைபெறுகின்றன.

பண்டைக்காலத்திற் றலைமயிரையெல்லாம் ஒன்றுகூட்டி உச் சந்தலையின் முடியாக முடிப்பது வழக்கமென்பதை சிலா விக்கிரங்க ளிலே பெரும்பான்மையுங் காணலாம். இம்மயிர்முடிமேற் கவிப்ப தாகிய கிரீடமும் முடியென்றாயிற்று. உச்சந்தலையின் முடிப்பது வழக்காறாயிருந்தமையின் மலைநாட்டார் உச்சந்தலையில், சாஸ்திரத் துக்காக (அதாவது அநுசரித்துவந்த ஆசாரத்துக்காக)க்கொஞ்சம் மயிரை வைத்துக்கொண்டு மிகுதியாயிருப்பதை வெட்டிக்களைந்த னர். இச்சௌகரியமுத்தேசித்தே, கொஞ்சம் சிகையை (—இவ் வார்த்தையின் பொருளையும் கவனிக்கத்தக்கது—) வைத்து மற்றைப் பாகங்களிலுள்ள மயிரைக்களைதல் மற்றைய நாட்டிலும் வழக்கமாயி ருக்கிறது. ஆதலால் முன்குடுமியால், மலைநாட்டார் தமிழரினும் வேறுபட்டவரெனல் தகாது.

"உண்பது நாழி உடுப்பது நான்கு முழ"மென்ற தமிழ்ப்பழ மொழிக்கிலக்காக இன்னும் மலைநாட்டாரைக்காண்பதுபோலத்தமிழ் நாட்டாரைக்காண்டலரிது.

இவர்களுந் தமிழ்நாட்டாரும் அளவளாவியிருந்தனரென்பது பழஞ்சாஸனங்களாலும், இலக்கியங்களாலும், பண்டைக்காலத்தார்

பெண்கோடல், கொடுத்தன்முதலியன செய்துவந்ததினாலும் நன்கு விளங்கும்.

இவ்வாறு, பலவகையால் உற்றுநோக்குமிடத்து மலைநாட்டார் தாம் பழந்தமிழ்க்குடிகளில் இக்காலத்தி லெஞ்சிநின்றவரென்பதும், பழங்காலத்திய பதங்கள், நடை உடை பாவனைகளை யறியவேண்டுமானால் இந்நாட்டிற்றான் இனியுங் காணலாமென்பதும், இவர் பேசும் பாஷை பழந்தமிழென்பதும் ஐயமறச் சாதிக்கலாம்.

து. அ. கோபிநாத ராவ்

உ

சிவமயம்.

இராமாவதாரச்செய்யுட்பாடாந்தரமும்

அரும்பதவிளக்கமும்

("சேந்தமிழ்" ௯-ஆந்தொகுதி ௪௯௫-ம் பக்கத்தொடர்ச்சி.)

மந்திரப்படலம்

(௧௯) வஞ்சனை மனிதரை யியற்றி வாணுதற்
பஞ்சன மெல்லடி மயிலைப் பற்றுத
லஞ்சினர் தொழிலென வறிவித் தேற்கது
தஞ்சென வுணர்ந்திலை யுணருந் தன்மையோய்.

மனிதரை வஞ்சனையியற்றியென்க, மனிதரை யியற்றி யென்பது "தவ்வையைக்காட்டி" என்பதிற்போல உருபுமயக்கம். தஞ்சம் தஞ்சு என விகாரமாயிற்று. உணருந் தன்மையோய் - தக்கது இது தகாதது இது வென்று பகுத்தறியுந் தன்மையையுடையோய். வேதங்களையும், மநுநூலையுங் கற்றறிந்தவனாதலின் நீ நான்சொல்லியவற்றை நன்கறியத்தக்க வியல்புடையையென்பா னுணருந்தன்மையோயென்றான். இராவணன் வேத முதலியவற்றைக் கற்றறிந்தவனென்பது, "மநுநூலும் - வேதமவைபொராயிரமும் விளங்குங்கலையுந்தசக்கிரிவ - னோதவோதப்போதங்கெட் டபோதமானதோங்கியதே" என்னுஞ் செய்யுளானறியப்படும்.

௧எ கரன்முதல் வீரரைக் கொன்ற கள்வரை
விரிகுழ லுங்கைமூக் கரிந்த வீரரைப்
பரிபவஞ் செய்ஞரைப் படுக்க லாதுநீ
யரசிய லழிந்ததென் றயர்தி போலுமால்.

வனத்திற்றமக்குத் தெரியாதிருந்து கொன்றமையிற் கள்வரென்றும், பெண்ணினது மூக்கையரிதல் வீரத்தொழிலன்மையின் இகழ்ச்சிக்குறிப்புத்தோன்ற வீரரென்றும், மூக்கரிதல் குரங்கினலக்கினி கொளுத்துவித்தன்முதலியவற்றாலெமக்கு அவமானஞ்செய்தோரென்பான் பரிபவஞ்செய்ஞரை யென்றுங் கூறினன். பரிபவம் - அவமானம். போலும் - ஒப்பில்போலி. இத்துணைத்தீமையெல்லாநமக்குப் புரியவு நாமவரைக் கொல்லாது அரசிய லழிந்ததென்றிரங்கியுறின், அவர்கள் "இளைதிற் கொல்லப்படாத முண்மரம்போல" வலிதாயகாலத் தெம்மையெல்லாமழித்து எம்மரசியலையுமழிப்பாரென்பான் இவ்வாறு கூறினன். செயப்படுபொருள்கள் அவ்வப்பொழுதே கொன்றுவிடுதல்வேண்டுமென்பதுதோன்ற நின்றன.

(௧அ) தண்டமென் றொருபொருட் குரிய தக்கரைக்
கண்டவர்ப் பொறுப்பரோ வுலகங் காவலர்
வண்டம ரலங்கலாய் வணங்கி வாழ்வரோ
விண்டவ ருறுவலி யடக்கும் வெம்மையோர்.

நால்வகை யுபாயங்களுள் இறுதியினின்ற தண்டமென்றுசொல்லப்படும் ஒப்பற்றபயனை யடைதற்குரிய தகுதியாளரை யறிந்து வைத்தும் அவரையுடனே தண்டனை செய்யாது உலகங்காவலர் பொறுத்துப்பார்ப்பாரோ வென்க. கண்டவர்ப் பொறுப்பரோவெனப் பகரமிகுத்துப் பாடங்கொள்க. விண்டவர் - பகைவர். வெம்மை - தறுகண்மை. அலங்கல் - வெற்றிமாலை. நீயும் வீரனதலிற் பணிந்து வாழ்தல் கூடாதென்பான் வண்டமரலங்கலாயென்றான். வணங்கல் ஈண்டஞ்சிக் காலந்தாழ்த்தலென்னும்பொருட்டு. பகைவர் வலியை யடக்காதுவணங்கிவாழ்தல் "தறுகணாளர்க்குப்போராண்மையன்றே"ன்பான் வெம்மையோர் வணங்கிவாழ்வரோ வென்றான்.

(௧௯) செற்றன ரெதிரெழுந் தேவர் தானவர்
கொற்றமும் வீரமும் வலியுங் கூட்டற
முற்றிமூன் றுலகுநீ முதல்வ னுயதா
வெற்றியோ பொறைகொலோ விளம்பல் வேண்டுமால்.

செற்றனர் - வினையெச்சமுற்று ; பகைத்தவராயென்க. கூட்டற - ஒருசேர வழிய. முதல்வனுயது மேற்சேரலாலாயதோ பொறுத்திருந்ததனுலாயதோ மொழிதல்வேண்டுமென்க. மொழிதல்வேண்டும் முன்னிலை வியங்கோள். வெற்றிக்குக் காரணமாகிய மேற்சேறலை வெற்றியென்றதுபசாரம். மேற்சேறலாலாயதென்பது குறிப்பு. உலகிற்கென்பதிற் குவ்வுருபு விகாரத்தாற்ருெக்கது.

(உ0) விலங்கின ருயிர்கெட விலக்கி மீள்கலா
திலங்கையி னினிதிருந் தின்பந் துய்த்துமேல்
குலங்கெழு காவல குரங்கிற் றங்குமோ
வுலங்குநம் மேல்வர வொழிக்கற் பாலதோ.

விலங்கினர் - பகைவர். விலக்கி - கொன்று. குரங்கில் தங்குமோ - குரங்களவில் முடியுமோ. உலங்கு - கொசுகு. வரவு ஒழிக்கற்பாலதோ - வருமென்றபடி.

(உக) தேவரு மடங்கின ரியக்கர் சிந்தினர்
தாவருந் தானவர் தருக்குத் தாழ்ந்தனர்
யாவரு மிறைவரென் றிறைஞ்சு மேன்மையர்
மூவரு மொதுங்கின ருனக்கு மொய்ம்பினேய்.

தா அரும் - கெடுதலில்லாத. இறைவர் - கடவுளர். உனக்கென்பது இறுதிவிளக்கு. அப்படிப்பட்ட நீ குரங்குக்கும் மனிதருக்குமஞ்சிவாழுகின்ருயோவென்பது குறிப்பெச்சம்.

(உஉ) போயின குரங்கினைத் தொடர்ந்து போயவ
ரேயின ருயிர்குடித் தெவ்வந் தீர்கலம்
வாயினு மனத்தினும் வெறுத்து வாழ்துமே
லோயுநம் வலியென வுணரக் கூறினன்.

ஏயினர் - இராமலக்குவர். எவ்வம் - இழிவு; என்றது மனிதராலுங் குரங்காலும் வந்த விழிவை. சொல்லளவிலன்றி மனத்தாலும்வெறுத்து வாழுவேமாயினென்பான் வாயினுமனத்தினும் வெறுத்து வாழ்துமேலென்ருன். வாய் - ஆகுபெயர். ஓய்தல் -குறைதல்.

(உ௩) மற்றவன் பின்னுற மகோதரப் பெயர்க்
கற்றடந் தோளின னெரியுங் கண்ணினன்
முற்றுற நோக்கினன் முடிவு மன்னதாற்
கொற்றவ கேளென வினைய கூறினன்.

எரியும் – (கோபத்தினலக்கினி) சுவாலிக்கும். முற்றுற - கடைப்போக ; முழுவதையும் பொருந்தவென்றல் சிறப்பின்று. நோக்குதல் - சிந்தித்தல். அன்னது - (யாஞ் சொல்லக்கிடக்கும்) அதுவேயாம். இனி யவன்கூறிய அதுவேயாமெனினுமாம். நோக்கினனுய்க் கூறினனென்க. ஆல் - அசை.

(உச) ஏற்றமென் பிறிதினி யெவர்க்கு மின்னுயிர்
மாற்றரு முறைமைசால் வலியின் மாண்பமை
கூற்றவன் றன்னுயிர் கொள்ளுங் கூற்றெனத்
தோற்றுநின் னேவறன் றலையிற் சூடுமால்.

ஏற்றம் - உயர்ச்சி. எவர்க்கும் - எத்துணை வலியோர்க்கும். அரும் முறைமை - அரியநீதி. இனி, எத்துணை வலியோராலும் இனியவுயிரை நீக்குதற்கரிய வியல்பின்மிக்க கூற்றுவனெனினுமாம். கூற்றுவன் எழுவாய். தோற்றும் - காணப்படும். சூடும் - செய்யுமென்னுமுற்று. இயமனே நின் ஏவலைச்சூடும் ; அங்ஙனமாயினிதனினும்பார்க்க இனியேற்றம் பிறிதென்னையென்பதாம். எனவே இவ்வாறுப வேற்றமுடைய நீ ஒரு குரங்குக்கும் இருமனிதருக்குமஞ்சியிருக்கின்றாயோ வென்பது குறிப்பு.

(உரு) வெள்ளியங் கிரியினை விடையின் பாகனே
டள்ளிவிண் டொடவெடுத் தார்த்த வாற்றலாய்
சுள்ளியி னிருந்துறை குரங்கின் றேள்வலிக்
கெள்ளுதி போலுநின் புயத்தை யெம்மொடும்.

விடையின் பாகன் - விடையினைச் செலுத்துவோன்=சிவன். அள்ளி - இலகுவாகப்பிடுங்கி. எடுத்த - தூக்கிய, வெள்ளியங் கிரியினைச் சிவனேடுமெடுத்த அத்துணைவலியமைந்த புயமென்பான் நின்புயமெனச்சுட்டிக்கூறினன். இராவணனே நின்புயமோ மலையைச் சிவனேடெடுத்த அத்துணை வலியதென்பான் வெள்ளியங்கிரியினை விடையின்பாகனே டள்ளிவிண்டொடவெடுத் தார்த்த வாற்ற

லாய் நின்புயம் என்றும், குரங்கினது புயமோ மரத்திலுள்ள ஒருசுள்ளியாற் சுமக்கப்பட்டு அதன் மேலிருக்கின்ற வொரு குரங்கினுடைய அத்துணை மெலியதென்பான் சுள்ளியினிருந்துறை குரங்கின்றோள் வலிக்கென்றுங் கூறினான். சிவனெவரினும்வலியவர்; அவரைச் சுமந்திருக்குமலையோ அவரினும் வலியது; அதனையெடுத்த நின்புயமோ அதனினும் வலியது. சுள்ளியோ மெலியது; அதனாற் சுமக்கப்பட்ட குரங்கோ அதனினுமெலியது; அதனுறுப்புளொன்றாகிய புயம் அதனினுமெலியதென்பதாம். தேவர் தானவர் முதலியோரையெல்லாம் வென்ற வலிபடைத்த வெம்மொடுமென ஈண்டைக்கியைபவிதந்துகூறுக.

(உசு) மண்ணினும் வானினு மற்று முற்றுநின்
கண்ணினு நீங்கினர் யாவர் கண்டவர்
நண்ணரும் வலத்தினர் யாவர் நாயக
வெண்ணில ரிறந்தவ ரெண்ணி லாவரோ.

கண் - கண்ணோட்டம். நீங்கினராய்க் காணப்பட்டவர் யாவர்? அன்றியும் வலத்தையுடையவராயிருந்தவர் யாவர்? உன் வலியையெண்ணாதவராயிறந்தவரெண்ணுளடங்குவாரோ வென்க. திரிலோகத்திலுமுனக்குக்கீழ்ப்படாதவராய்க் காணப்பட்டவருமில்லை, உன்னால் வெல்லப்படாதவருமில்லை; அன்றி யுன்னை மதியாதவர் (கீழ்ப்படாதவர்) இறந்தவரேயாயினரென்பதுகருத்து. எனவே, அவ்வாறாய நீ மனிதருக்குங் குரங்குக்குமஞ்சி யிவ்வாறு பொறுத்திருத்தல் தகுதியன்றென்பதாம். வலத்தினராய்க் காணப்பட்டவர் யாவரெனினுமாம். வலம் - வெற்றி.

(உஎ) இடுக்கிவ ணியம்புவ தில்லை யீண்டெனை
விடுக்குவை யாமெனிற் குரங்கை வேரறுத்
தொடுக்கரு மனிதரை யுயிருண் டுன்பகை
முடிக்குவன் யானென முடியக் கூறினான்.

இடுக்கு - துன்பம்; என்றது அது வருதற்குரிய வழியை. எனவேயுனக்குத் துன்பம் வருதற்குரிய வழியை நானிங்குக்கூறுவதில்லையென்பதாம். ஒடுக்க அரும் மனிதர் - எவராலுமழித்தற்கரிய மனிதர்; வெல்லுதல்கூடாத மனிதரென்றபடி. கரதூஷ

ணார்கண் முதலியோரையும் மாரீசனையுங் கொன்றமைபற்றி யிவ்வாறு கூறினன். முடியக்கூறினன் தன்னினைவை முற்றச்சொன்னான். "மிடுக்கிவண் விளம்புவதென்னை வெய்தென" வெனவும் பாடம். மிடுக்கு - வலி.

(உஅ) இச்சிரத் தவனுரைத் திறுக்கு மேல்வையில்
வச்சிரத் தெயிற்றினன் வல்லை கூறின
னச்சிரத் தைக்கொரு பொருளின் றாயினும்
பச்சிரத் தம்பொழி பருதிக் கண்ணினன்.

இந்த முதன்மையினையுடையவனாகிய மகோதரன் கூறிமுடிக்குஞ் சமயத்திற் பசிய ரத்தஞ்சொரிகின்ற சூரியனையொத்த கண்களையுடையவனாகிய வச்சிரதந்தனனவன் சொல்லப்படுமந்த அன்பிற்குரிய வார்த்தைகளுக்கொரு பொருளிலதாயினும் விரையக்கூறினனென்க. சிரத்தை - அன்பு; என்றது அதனைக்காட்டும் வார்த்தைகளை. இராவணனாதியோரால் விரும்பத்தக்க வார்த்தை யெனினுமாம். பயனற்ற வார்த்தையென்பார் ஒரு பொருளின்றாயினுமென்றார்.

கூО எவ்வுல கத்துநின் னேவல் கேட்கிலாத்
தெவ்வினை யறுத்தனக் கடிமை செய்தயான்
தவ்வின பணியுள தாகத் தான்கொலோ
விவ்வினை யென்வயி னீகலா தென்றான்.

தெவ் - பகை. அறுத்தல்—சமூலத்தோடழித்தல். தவ்வின — தவறின. இவ்வினை - இந்த(ப் போர்)த்தொழில். தான் - கட்டுரைச்சுவை படவந்த சாரியை. கொல் - அசைநிலை. ஈகலாதகென்பது ஈகலாதென விகாரமாய் நின்றது.

சி. கணேசையர்.

பாடசாலை

(செந்தமிழ் அ-ஆந்தொகுதி சஙுО-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

பிள்ளைகளைப்பயிற்றும் பாரம்பெற்றாருபாத்தியாயரென்னுமிருபாலாரினும் பொறுத்ததொன்றாம். ஒருவரினுதவியின்றி மற்றவர்

தனியே செய்துமுடித்தலரிது. பாடசாலைகளுள்ளும் பகற்பாடசாலைகள் பிள்ளைகளுக்குப் பெரும்பான்மை கல்விபுகட்டற்குஞ் சிறுபான்மையொழுக்கம் பயிற்றற்குமியன்றன. பிள்ளைகளை நல்வழியிற்சேறப் பண்ணும்பாரம் பெற்றார்மேலது. ஆகலின், புத்திமான்களாகிய பெற்றாரு முபாத்தியாயரு மவரவர்கடமையையறிந்து ஒருவர் முயற்சியை பொருவர்தழுவிநடக்கி னவர்பயிற்றுஞ் சிறுவர் நல்லொழுக்கத்திற்றலைப்பட்டு நிறையுவா முன்மதியென வளர்வர்.

(ii) பாடசாலை வகை.

ஈண்டு விடுதிப்பாடசாலையைப்பற்றி யாராய்தறக்கது, பாடசாலை வீடு என்னுமிரண்டன் நோக்கங்களையுமொருவாறு ஒன்றிற்றானே யமைத்துக்கோடற்குப் போந்தததுவாகலின். உள்ளவாறுணரி னொருசிறுவன் தன்வீட்டிலிருந்து பழகும் நற்பழக்கத்தினைப் பள்ளிக்கூடத்தில் வரச்செய்வதரிது; பள்ளிக்கூடம் மிகப்பெரிதாயினதனினுமரிதென்க. விடுதிப்பாடசாலை, பகற்பாடசாலை என்னுமிரண்டுள்ளுமெதுவுயர்ந்தது எது இழிந்தது எனவெடுத்துக்கூறலெளிதன்று. விடுதிப்பாடசாலை யுபாத்தியாயர் தகுதியுடையாரென நன்கறியப்பட்டவராதல் வேண்டுமென்பது; என்னை? பிள்ளைகள் முழுமையு மவர்வசமே யிருந்து வளர்பவராகலின். பகற்பாடசாலைகளிலோ பெற்றாருடைய விருப்பங்களும் வீட்டுப்பழக்கங்களு மதிகச் செல்வாக்குடையனவாக விருக்கும். விடுதிப்பாடசாலையிற் கற்பவர் வருடத்தில் முக்காற் பாகத்தையும் பாடசாலையிற் கழிப்பர். ஆண் பெண்ணென்னுமிருபாலாரும் முற்றும் பிரிந்துமிருப்பர். பகற் பாடசாலை விஷயத்தி லப்படியன்று. பாடசாலை மூலமா யதனயலிலுள்ளார் திருத்தமுறுவர். அங்குக் கற்பவரும் நாடோறுந் தம்மினத்துள்ள பெரியோருடன் கலந்து திருத்தமடைவர். மேலுமிவ்விருவகைப்பாடசாலையி னயலுமொருவகையினதல்ல. விடுதிப்பாடசாலைக்கேற்புடைத் தானங் கிராமமும் கிராமாந்திரப்பட்டினங்களுமாகும். பகற்பாடசாலைக்கு அதனைச்சூழ்வரக்குடிஜநமிருக்கவேண்டுமாகலின் நகரங்களே பெரிதுமேற்ற விடமாம். பொதுவாய்ப் பதினெண்ணாண்டிற்குக்கீழ்ப்பட்ட வயதினர்க்கு நல்ல "வீடு"ம் நல்ல பாடசாலையும் போலவேற்புடையது பிறிதில்லையென்க. நல்ல "வீடு" இல்லாத

வர்க்கு விடுதிப்பாடசாலையே சிறந்தது. பெற்றோரின் துர்நடத்தை அவரின் மரணம், வறுமை முதலியன காரணமா யனாதையாவார்க்கு விடுதிப்பாடசாலை யத்தியாவசியம் வேண்டற்பாலது. துர்ப்பழக்கத் திற்கேதுவாய வொருவீட்டிலு மொருநல்ல விடுதிப்பாடசாலை மிக மேலானது. எவ்வளவு நல்லதாகிலும் விடுதிப்பாடசாலை யொரு நல்வீட்டைப்போலாகாது, வீட்டிலுளதாய வியற்கையன்பென்னுந் தொடரங்குண்டாகாதாகலின்.

பாடசாலை, வீடு என்னு மிரண்டற்குமுள்ள சம்பந்தத்தைப்பற் றியும், பகற் பாடசாலை விடுதிப்பாடசாலை யென்பவற்றிற்குள்ள தார தம்மியத்தைப்பற்றியு மிதுகாறுமாராய்ந்தனம். இனிப், பாடசாலை களிற் கற்பிக்கப்படுங் கல்வி வகையினானே யவை யொன்றற்கொன்று வேறுபடும். கல்வியும் பொதுச் சிறப்பென விருவகைத்து. எனவே யதனைக்கற்பித்தற்கியன்ற பாடசாலைகளு மிருதிறத்தனவாதல் பெறப் படும். பொதுக்கல்வியாவது: எத்தகையினர்க்கு மின்றியமையாத தாய்ப் பொதுவா யறிவைவளர்த்தற்கேதுவாயது. அதுவு மிலக்கியம், இலக்கணம், கணிதம் முதலியனவற்றைக் கற்றலினாலடையப்படும். சிறப்புக்கல்வியாவது தொழில்வகையினுளொன்றனையேபற்றி யறி வூட்டுங்கல்வியாம். அது சிற்பம்,வைத்தியம், நீதி, சோதிடம் முத லியவற்றைப்பற்றிய நூல்களைக்கற்றல்.

பொதுக்கல்வி கற்பிக்கும் பாடசாலை மூவகைப்படும். அவை ஆதாரபாடசாலை, மத்தியபாடசாலை, உயர்தரப்பாடசாலை என்பன. ஆதாரபாடசாலை பிரதமபாடசாலை யெனவும்படும். அது சிறுவர்களை ஆதாரபாடங்களாகிய வெழுதல், வாசித்தல் முதலியவற்றின் முதன் முதலிற் பயிற்றற்குரிய விடம். இங்கு 5-வயதுமுதல் 10-வயது வரைக் குஞ் சிறுவர்கள் கற்கலாம். அதன்மேல் 16, 17-வயதுவரை வாசித் தற்கும், முற்கூறிய பாடங்களிலும் வேறு விஷயங்களிலு மதிகத் தேர்ச்சியடைதற்குமேற்றது மத்தியபாடசாலை. மத்தியபாடசாலை யொன்று ஒரு ஆதாரபாடசாலையையு முள்ளடக்கியேயிருக்கும். உயர் தரப்பாடசாலையாவது: சிறிது கற்றுத்தேறினர் மேலுந் தம் மறிவை வளர்த்தற்கும் பழைய விலக்கியங்களிலு மிலக்கணத்திலும் மற்றைய சாத்திரங்களிலுங் கற்றுவல்ல பண்டிதராதற்குந் தமிழ்ப்பாஷைக்குத்

துணையாக ஆரியம் ஆங்கிலம் முதலிய வேறுபாஷைகளிற் பயிலற்கு மேற்றவிடமாகும். காவியபாடசாலைமுதலியன இவ்வகுப்பிலடங்குவனவாம்.

மனிதரும் ஆண் பெண்ணென விருபாலராதலி னவர்படிக்கும்பாடசாலையும் ஆண்கள்பாடசாலை, பெண்கள்பாடசாலையென இருவகைப்படும். இருபாலாருங் கலந்துபடிக்கும் பாடசாலை கலவன் பாடசாலை யெனப்படும். ஆண்களையும் பெண்களையுந் தனித்தனி பாடசாலைகளில்விட்டுப் பயிற்றலோ, அன்றி யொருபாடசாலையிற்றானே கலந்து கற்பித்தலோ உசிதமென வேறுதேசங்களில் வாதநிகழா நிற்பினும், இந்நாட்டில் வெவ்வேறாகவைத்துக் கற்பித்தலே சாலவுமேற்புடைத்து. ஆகிலும், பாலர்வகுப்பிலும் ஆதாரபாடசாலையின் கீழ்த்தரங்களிலு மொருங்குகற்பித்த லிழுக்காகாதென்க ஆண்களை 8, 9-வயதின்மேற் பெண்கள்பாடசாலைகளில் விட்டுக்கற்பித்தலா லவர் தீரமற்றுப் பேதைகளாதற்கு மேதுவாம். அதனா லதுபெரும்பான்மையும் வேண்டப்படுவதொன்றன்று.

தி. சதாசிவ ஐயர்.

கைத்தொழிற்கண்ணாடி

(செந்தமிழ், க௦ ஆந்தொகுதி ௬௬-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

பாட்வாக்கள் இப்பொழுது சரவைப்பூச்சுப் படங்கள் எழுதுகிறார்கள். அவை கல்கத்தாவுக்கு அருகிலுள்ள காளிகட்டத்துக் கோவிலிலும் மற்றுமுள்ள யாத்திரை ஸ்தலங்களிலும் சந்தைகளிலும் ஆயிரக்கணக்காக விலையாகின்றன. சாதாரணமாக, அந்தப்படங்களின் விஷயங்கள் புராணசம்பந்தமாகவே இருக்கும்; ஆயினும், இப்போதுசிலநாளாக இந்தியவாழ்க்கையிற் பரிகாசத்திற்கிடமாகப் பாவனைகளையும் படங்களில் எழுதிவருகிறார்கள். அந்தமாதிரியான படங்கள் ஒருதம்பிடி-முதல் ஓர்அணாவரையில் விலைக்கு விற்கப்படும். இங்கே கொடுத்திருக்கும் விலைப்பட்டி சரியான திட்டமாகும் :—

காளிதேவதை	...	அரை அணா.
ராதாகிருஷ்ணன்	...	ஷை
ஜகதாத்திரி (உலகமாதா)		,,
ஸரஸ்வதி	...	,,
தண்ணீர்கொண்டுவரும் ஸ்திரீ		,,
பால்கறத்தல்	...	,,

சித்திரக்கலாசாலை மாணவர்களும் ஐரோப்பிய முறைப்படி நீர்ச்சாயைப்படங்கள் எழுதுகிறார்கள். தாடியோடு ருத்திராக்ஷாதி மாலைகளணிந்த தவசிகளின் தலைமுதலியன எழுதுவதிலும், பற்பல ஜாதியார்களின் முகங்களையும் பற்பல நாட்டாரின் முகங்களையும் எழுதுவதிலும் அவர்களுக்குப் பிரியம் அதிகம் தேசக்காட்சிகளைப் படமெழுதுவதில் அவர்களுக்குத் தேர்ச்சி அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. சித்திரச்சாலை மாணவர் எழுதும் நீர்ச்சாயைப்படம் ரூ. 25-க்கும் அதற்கு அதிகமான விலைக்கும் விற்கப்படுகிறது.

பாபுசரத்சந்திரதாஸ், ஸி. ஐ. இ. என்பவர் கலோனியல் அண்டு இண்டியன் எக்சிபிஷனுக்குச் சில நீர்ச்சாயைப்படங்கள் அனுப்பியிருந்தார். அவை தீபெத்துக்காரர்களால் எழுதப்பட்டவை; தீபெத்திலுள்ள மடங்களின் உட்புறத்தை அலங்கரிப்பதற்கான படங்கள் போன்றவை.

மைசூர் ஸம்ஸ்தானத்துப் பெரியபட்டணங்களிற் சித்திரக்காரர்கள் நீர்ச்சாயைப்படங்கள் எழுதுகிறார்கள். அவை முக்கியமாகப் பிரபுக்கள், நாட்டாண்மைக்காரர்கள், அரசர்கள், புராணபுருஷர்கள் ஆகிய இவர்களின் படங்களாகவே இருக்கும். ஒற்றைப்படம் (ஒரு ரூபம் மாத்திரமுள்ளது), 10"×10", விலை ரூபா 5-முதல், சங்கலிதபடம் (இரண்டு மூன்று ரூபங்களடங்கிய படம்), 20"×20", ரூபா 15-வரையில் விலையாம்.

பர்மாவில் சித்திரமெழுதும் வேலை அதிகமாக நடக்கிறது. 1881-ஆம் வருஷத்து ஜனத்தொகைக் கணக்கின்படி இந்தத்தொழிலில் அமர்ந்திருந்தவர்கள் 1,078-பேர். அவர்களுள் பாதிப்பேர் கிராம

ந்தரவாஸிகள். சித்திரக்காரர்கள் அதிகமாக இருப்பது ரங்கூன், மௌல்மீன், பாஸீன் என்னும் பட்டணங்களிலும், பாஸீன், ஹென் ஸாடா என்னும் ஜில்லாக்களிலும் ஆகும். தொழிலில் ஆதாயம் அந்தந்தச் சித்திரக்காரனுடைய கீர்த்திக்குத் தக்கபடி இருக்கிறது. மௌல்மீனில் ஒரு சித்திரக்காரன் ஒற்றைப்படம் எழுதுவதற்கு ரூ. 80-முதல் 120-வரையில் வாங்குகிறனும்; ரங்கூனில் அலங்காரம் செய்பவர்களுள் உத்தமமானவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 60 சம்பாதிக்கிறார்கள். சாதாரணச் சித்திரக்காரனுக்கு மாதம் ஒன்றுக்கு முப்பது ரூபா கிடைக்கும்.

அவர்கள் உபயோகிக்கும் வர்ணங்கள் இங்கிலாந்திலிருந்துவந்து கடைத்தெருவில் விற்கும் வர்ணப்பொடிகளே. நீல வர்ணமும் மஞ்சட்காவியும் இங்கிலாந்துச் சரக்குகளல்ல; ரத்தச்சிவப்பு மாண்டலேயிலிருந்து வருகிறது; கரி எங்கும் கிடைக்கிறது. அவர்கள் கித்தானுக்குப் பதிலாகப் பருத்திநூற்றுணியையுபயோகிக்கிறார்கள்; அந்தத்துணிக்குச் சுண்ணம்பும் ஒருவகைக்கோந்தும் அரைத்துப் பசையூட்டுகிறார்கள். காளைமாட்டின் காதுக்குள் இருக்கிற மயிர்களை யெடுத்துப் பட்டுநூலினுற்கட்டிப் புறாவிறகு முதலிய கட்டைகளில் ஒட்டிவைத்துக்கொண்டு தூலிகைகளாக உபயோகிக்கிறார்கள்.

பர்மாக்காரர்களுள் அனேகர் இயற்கையில் அவர்களுக்கு அமைந்திருக்கும் புத்தியினுலேயே (பிரதிபையினுல்) சித்திரமெழுதுகிறார்கள். அவர்களுள் சித்திரமெழுதுவதை வித்தையாகக் கற்றவர்கள் பென்சிலினுல் அங்காகிருதி அமைத்து எழுதுவதிற் கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனுல், ஆழ்ந்த கருத்துக்களையமைத்துச் சித்திரமெழுதவும், லேசாக வர்ணங்கொடுக்கவேண்டிய இடத்தையும் பிரகாசமாகக் கொடுக்கவேண்டிய இடத்தையும் உணர்ந்து வர்ணங்கொடுக்க அவர்களுக்குத் தெரியாது. இப்படிப்பட்ட விவரங்களெல்லாம் நாமாக ஏற்படுத்திக்கொண்டனவேயெனினும், சித்திரத்தின் பொதுவான கருத்து அதனை எழுதுகிறவனுடைய சிருஷ்டியேயாகும். ஆதலின், அந்தத்தேசத்தார் நாடகங்களுக்கு வேண்டிய படங்களையும் புராணவிஷயங்களையும் மிக்க அற்புதமாக எழுதுகிறார்கள் என்பது ஆச்சரியப்படத்தக்கதன்று. இயற்கையில் அவர்

களுக்குப் புத்தியதிகமாக இருப்பதனால் அவர்கள் அப்படி எழுதுவது நியாயமே. அவைகள் ஜீவகளைபொருந்தி ஹாஸ்யரஸமுமமைந்த படங்களாயிருக்கின்றன. தேசக்காட்சிப் படமெழுதுவது இன்னும் ஆரம்பதெசையிலிருக்கிறது; ஆனால், சித்திரக்காரர்கள் அதைக் கற்றுக்கொள்ள ஆவல்கொண்டிருக்கிறார்கள். மொத்தத்தில், சித்திரமெழுதும் வித்தை பர்மாவில் அபிவிருத்தியடைந்துவருகிறது; இன்னும் கற்றுக்கொள்ளவேண்டிய அமிசம் அதிகமாக இருக்கிறதென்று சித்திரக்காரர் தெரிந்துகொண்டிருக்கிறார்கள்; ஆதலால், அவர்கள் சீக்கிரத்திற் சீர்திருந்தித் தேர்ச்சியடைவார்களென்னலாம்.

பருத்திநூற்றுணிகளை மரச்சட்டங்களிற் கெட்டியாகப்பதித்து, கஞ்சிப்பசைபூசி விறைப்பாக்கி, கரியினால் அங்காகிருதி எழுதிப் பார்த்து, அது சரியாக இருந்தால் செங்காவியினால் எழுதுவார்கள்; அதன்மீது வர்ணங்களை வேண்டியபடி போடுவார்கள். சாதாரணமாக அடிப்படையானது இலேசானகருப்பு வர்ணப்பூச்சாக இருக்கும்.

வட இந்தியாவில் அநேக இடங்களிலும் சென்னபட்டணத்திலும் கடுதாசியிற் கைநகங்கொண்டு அலங்காரமான சுருள்வேலைகள் பல செய்கிறார்கள். அஃது இந்தியாவில் விசேஷமாகக் காணப்படும் பயனற்ற சாதுரியத்திற்கொரு திருஷ்டாந்தமாகும். லாகூரிலுள்ள மீரான் பக்ஷ் (Miran Baksh) என்பவன் கைநகத்தினாற் செய்த புடைப்புச் சித்திரவேலை யொன்று கல்கத்தா இன்டர் நாஷனல் எக்சிபிஷனுக்கு வந்திருந்தது. அதன் விலை ரூ. 15. அந்த எக்சிபிஷனுக்கு இந்தூரி (Indore) லிருந்தும் கைநகத்தினாலெழுதிய சித்திரமொன்றும் வந்திருந்தது.

கண்ணாடிப்படம்;— சில நாளைக்குமுன்னர் வங்காளத்திலும் தென்னிந்தியாவிலும் அநேக இடங்களில், புராண விஷயப்படங்களெல்லாம் கண்ணாடியில் வர்ணங்களினால் எழுதப்பட்டு வந்தன. இன்றைக்கும் சென்னை தேவராஜ முதலித்தெருவில் அப்படிப்பட்ட படங்கள் நன்றாக வியாபாரமாகின்றன. அவற்றில், சித்திரலேகன சாஸ்திர சம்பந்தமான யோக்கியதை அகப்படாததனால் அந்த வியாபாரம் க்ஷீணதிசையிலிருக்கிறது. வடஆற்காடு ஜில்லாவிலுள்ள சந்

திரகிரியிற் கண்ணாடிச்சித்திரங்கள் நன்றாக எழுதுகிறார்கள். இந்தியாவில் மற்றைப்பாகங்களிலும் கண்ணாடிப்படம் எழுதுகிறார்கள். வடமேற்கு ஐக்கியமாகாணத்தைச்சேர்ந்த ராம்பூர் ஸம்ஸ்தானத்திலிருந்து கண்ணாடிப்படமொன்று கல்கத்தா எக்சிபிஷனுக்கு வந்திருந்தது. அஃது அந்த நவாப்பினிடத்திற் சித்திரக்காரர்களாயிருந்த இரண்டு காஷ்மீர் வேலைக்காரர்கள் எழுதியது.

தந்தத்திற் சித்திரமெழுதுதல் :—இந்த வேலை பிரபலமாக நடப்பது டில்லியிலாகும். பெர்ஷியன் கையெழுத்துப்பிரதிகளைச் சோபிக்கச்செய்யும் வேலையானது இந்தியாவில் மகம்மதிய அரசாட்சி தலையெடுத்தோங்கியிருந்த காலத்தில் மிகவும் கொண்டாடப்பட்டு வந்தது; ஜனங்கள் அதை விசேஷமாக நாடிவந்தார்கள். அந்த வேலையின் பரிணாமமே சிறிய தந்தச் சித்திரவேலையென்னலாம்; அஃதாவது, கையெழுத்துப் பிரதிகளைச் சோபிக்கும் வேலைமுதிர்ந்து சிறிய தந்தச் சித்திரவேலை ஏற்பட்டது. சக்கரவர்த்திகள், இராணிகள், மகம்மதிய ஸம்ஸ்தானத்துச் சுந்தரவதிகள் ஆகிய இவர்களின் படங்களும்; ஆக்ராவிலுள்ள தாஜ்மஹால், டில்லியிலுள்ள ஜும்மாமசீது முதலிய பிரபலக்கட்டிடங்களின் படங்களும் மேற்சொல்லிய தந்தச் சித்திரங்களுக்கு முக்கியமான விஷயங்களாம். போடோகிராப்புப் படங்களைப்பார்த்தும் தந்தத்தில் வர்ணங்களோடு சித்திரமெழுதுகிறார்கள். அவர்கள் உபயோகிப்பது நீர்ச்சாயை யொன்றேயாம். அந்தச்சிறிய தந்தச் சித்திரங்களைக் கருங்காலி மரப்பெட்டி முதலியவைகளிலும் நகைகளிலும் வைத்து இழைக்கிறார்கள். அந்தச்சித்திரங்களின் தலையை இரண்டு கண்கள்வைத்து நேரே பார்ப்பதுபோலவும் (தோ - சாஷ்ம்), ஒரே கண்வைத்து (எக் - சாஷ்ம்) ஒருக்கணித்துப்பார்ப்பதுபோலவும் எழுதுவதுண்டு.

போடோகிராப்பு வித்தை வந்ததினால் டில்லி சிற்றுருப்படங்கள் விசேஷமான மாறுதலடைகின்றன. அவர்களிடத்தில் எந்தப் படம் கொடுத்தாலும் அவர்கள் அதைச்சிற்றுருவாகத் தந்தத்தில் எழுதுகிறார்கள். போடோகிராப்பைப்பார்த்து அவர்கள் செய்யும் வேலை அற்புதமாகவிருக்கிறது. ஆயினும், இன்னும் கொஞ்சம் சீர்ப்படவேண்டும். வரவர தேசக்காட்சிகளைத் தாராளமாக எழுத ஆரம்

பித்திருக்கிறார்கள். இற்றை நாள் டில்லிவேலைக்காரர் அதிநுட்பமாக எழுதுவதற்கு ஆசைப்படுகிறார்கள்; அதில் பெருமைகொண்டாடுகிறார்கள்; (எக்பால்காம்) ஒற்றைமயிர்த்தூரிகை கொண்டெழுதுவதில் அவர்களுக்குப்பிரியமதிகம். இதைக்கவனிக்கிறார்களேயன்றிச் சரியாகவும், தீர்க்கமாகவும் எழுதவிரும்புவதில்லை; நல்ல வர்ணங்கொடுப்பதில்லை.

டில்லி சித்திரக்காரர்களெல்லாரும் மகம்மதியர்கள். அவர்கள் பெர்ஷியன் சந்ததியார்களாம். அவர்கள் இப்போது கல்கத்தாவிலும் பம்பாயிலும் போய்க் குடிகொண்டிருக்கிறார்கள்; அங்கே பெரிய வியாபாரம் (சித்திரங்களில்) செய்கிறார்கள். சிற்றுருத்தந்தச் சித்திரங்களின் விலை ரூ. 10 முதல் ரூ. 100-வரையில் இருக்கிறது.

தந்தச் சித்திரவேலை காசியிலும் திருச்சிராப்பள்ளியிலும் கொஞ்சம் நடந்துவருகிறது. காசியில் சூனிலால் என்னும் இந்து ஒருவன் இதே தொழில்வைத்துக்கொண்டிருக்கிறான். அவன் எழுதும் சித்திரங்கள் தங்கமும் வர்ணங்களும் அமையப்பெற்றன; கையெழுத்துப்பிரதி விளக்கத்தைப்போல்வன. சித்திரவிஷயங்கள் புராணசம்பந்தமானவையே. ஒவ்வொரு சித்திரமும் ரூ. 20-முதல் ரூ. 50-வரையில் விலைபெறும்.

திருச்சிராப்பள்ளி வேலை நன்றாகவேயிருக்கிறது; கோவிந்தசாமிராஜா என்பவன் கல்கத்தா எக்சிபிஷனுக்கு இரண்டு சித்திரங்கள் அனுப்பியிருந்தான். அவற்றுள் ஒன்று இராமாயணத்தில் ஒரு களமாகும். இராமரும் ஸீதையும் சிங்காதனத்தில் வீற்றிருக்க, இடதுபுறத்தில் மூன்று தம்பிமாரும், வலது புறத்தில் ரிஷிகளும், கீழே வானரக்கூட்டங்கள் பணிந்துகொண்டிருக்க, ஹநுமார் இராமருடைய பாதத்தைத் தாங்கிக்கொண்டிருக்கிறார். அதன் விலை ரூ. $57\frac{1}{2}$. மற்றொரு சித்திரத்தில் கிருஷ்ணன் கதம்ப மரத்தடியில் வேணுகானம் செய்கிறார்; இருபுறத்திலும் இரண்டு கோபிகைகள் வெண்ணெய்த்திரளை கொடுக்கிறார்கள். அவருடைய காலைப் பசுவொன்று நக்குகிறது; விலை ரூ. 32. 1883-ஆம் வருஷத்துக் கல்கத்தா இண்டர் நாஷனல் எக்சிபிஷனுக்குச் சென்னையிலிருந்து ராஜகோபாலன்

என்பவன் சிற்றுருத்தந்தச் சித்திரங்கள் அனேகம் அனுப்பியிருந்தான். அவை நகைகளிற் பதிக்கத்தக்கவை; விலைகள் வருமாறு:—கைக்காப்புகளுக்குப் பதிக்கக்கூடிய தந்தச் சித்திரங்கள் ஏழுஜோடி, ரூ. $4\frac{1}{2}$; மார்பூசி (புரூச்)யிற் பதிக்கத்தக்க ஜோடி இரண்டு, ரூ. 3; பொத்தான்களுக்கு $2\frac{1}{2}$-டஜன், ரூபா $12\frac{1}{2}$.

ஜயப்பூரிலும் தந்தத்திற் சித்திரமெழுதுகிறார்கள். அங்குள்ளவர்கள் டில்லி சித்திரக்காரர்களிடத்திலிருந்து கற்றுக்கொண்டார்கள் போலும்.

தேசசஞ்சாரி.

உ

ஸ்ரீமான்-பாண்டித்துரையவர்கள் தேகவியோகமடைந்ததுபற்றி

மதுரைத் தேவஸ்தானம் கமிட்டி மெம்பரும் மஹாவித்துவானுமாகிய

அமராவதி புத்தூர். மகா-ள-ள-ஸ்ரீ-வயி. நாக. ராம. அ.

இராமநாதச்செட்டியாரவர்கள் கூறிய

இரங்கற் பாக்கள்.

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்
போற்பிரசங் கஞ்செய் வாய்மை
சிறந்தபாண் டித்துரையே பொன்னுச்சா
மிப்பெரியோன் சேயே நீயின்
றிறந்தமா துயர்க்கடிதங் கொடுமைதோய்த்
தெழுதியதீங் கெய்திற் றென்னே
திறந்தபோழ் தேகண்ணீ ராறுதுக்கக்
கடலீர்த்துச் சேர்த்த தந்தோ. (க)

தாயில்லாச் சங்கடஞ்சூ ழிளங்குழவி
போற்றமிழ்தத் தளிக்கக் காத்தாய்
நீயில்லாச் சங்கமினி யெவ்வாறு
நகருறுமோ நெடுஞா லந்தான்

வாயில்லாச் சங்கமென மதித்தொருகா
லொதுக்கிடுமோ வளர்ப்பார் யாரோ
நோயில்லாச் சங்கரன்ற ளேபோற்றும்
பாண்டிமன்ன நுவல்வா யந்தோ. (௨)

வெறுமையில்வெந் துயருழக்கும் பலர்க்கும்வெறுக்
கையுஞ்சோறும் வெறுக்க நல்கி
மறுமையினும் வந்துதவும் பெருங்கல்வி
தரும்பாண்டி மகிபா நீயே
பொறுமையில்வல் லாயென்பார் நிற்பிரிந்து
மனங்கருங்கற் போனிற் போம்புன்
சிறுமையிலாய் பொறுமையுளார் யாமேயோ
நீயேயோ செப்பா யந்தோ. (௩)

பொன்னையநண் பனையிழந்தோம் பாற்கரவேந்
தனையிழந்தோம் பொருவில் கல்விச்
சின்னையநண் பனையிழந்தோ மரங்கநா
தப்பெயர்கொள் சிறந்த வாய்மை
முன்னையநண் பனையிழந்தோ மமையாதே
பாண்டிமன்ன முடிவில் கீர்த்தி
நன்னையநண் பனையிழந்தோ மென்னவுமா
யிற்றந்தோ நாவ லீரே. (௪)

பூவோடு செறிந்தசெழுங் கற்பகச்சோ
லையினீழற் பொலியும் வாழ்க்கைத்
தேவோடு போய்ச்சேர்ந்தா யெனத்திடீ
ரெனக்கேட்டுத் திடுக்கிட் டோமவ்
வாவோடு நிகர்கொடைப்பாண் டித்துரைத்தே
வேசாதி யபிமா னத்தாற்
சாவோடு வந்தாலும் நட்பிடைவஞ்
சகந்தகுமோ தகுமோ வையா. (௫)

பிறந்தசங்க மெனுமுதன்மை யுளவமுதம்
பொழிகவியைப் பெரியோய் முன்னோர்

சிறந்தவரு டோற்சவத்தில் யான்புகல
நீயெவர்க்குஞ் செவிவா யேற்றி
நிறந்தகருங் கல்லெழுத்தி லழுத்திடுவே
னெனப்பலகா னிகழ்த்தி னுய்பின்
மறந்ததிலை யேயிமையாப் புலவரையும்
பாண்டிமன்ன மகிழ்வித் தாயோ. (சு)

விருந்தாய்வின் னுடுபுகுந் துபசாரம்
பெறுபாண்டி வேந்தே யுண்ணு
மருந்தாய்மந் திரமாய்ப்புண் ணியமாய்வந்
தடைந்திடும்யா வரையும் பெற்ற
வருந்தாயிற் காத்திந்த வகிலமெலாம்
புகழ்நிறுவி யழியா தென்று
மிருந்தாய்நீ யிறந்தாயோ விறந்தாயோ
விறந்தாயோ வென்னே யென்னே. (எ)

தென்னர்பல ரொருதமிழை மூன்றுமுறை
வளர்த்துமது சிதைந்த தென்னு
முன்னருறு மறிஞரெலா மெழுதியகா
தையிற்கேட்டே முகவை வாழ்ந்த
மன்னர்புகழ் தருபாண்டி மகிபாநீ
யேயதனை வையத் தென்றும்
நன்னர்நிலைத் திடநட்டாய் பிரிந்தாயின்
றிரண்டுநின்பால் நாங்கண் டோமே. (அ)

மறுதெய்வம் முத்திதர வல்லவல்ல
வெனத்தேறு மனத்தாற் காமற்
றெறுதெய்வ மறவாது தொழும்பாண்டித்
துரையேநின் றேவி மாரோர்
சிறுதெய்வம் பழிச்சினரென் றிடவடங்காச்
சினத்தாவி தீர்ந்தா யென்று
லுறுதெய்வம் பொலிசைவத் துணையல்லா
லுயர்ந்தோரு முளரோ வையா. (கூ)

தேருக்குச் சிறந்தவொரு சிகரமெனச்
சொலும்பாண்டித் தேவே மேவுங்
காருக்குக் கொடைபயிற்றுங் கரதலத்துப்
பெருந்தகையே களிப்பா லெம்பாற்
பேருக்குப் பிரியமன முடையேனென்
றனைபோலும் பிழையாய் மேலை
யூருக்குப் பிரியமன முடையேனென்
றதையுணரே முணரே மையா. (கo)

உ

புத்தகக் குறிப்பு.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சீர்திருத்தம் :— இது மதுரைத் தமிழ்ச்சங்கத்து வித்வான்களிலொருவராகிய மகிபாலன்பட்டி ஸ்ரீமாந்-மு. கதிரேசச்செட்டியாரவர்களால் மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் மகாசங்கத்திற் படிக்கப்பெற்றது. இப்புத்தகத்திற்கு டாக்டர் சர். எஸ். சுப்பிரமணிய ஐயாவர்கள் முதலிய கனவான்களெழுதிய அபிப்பிராயப்பத்திரங்கள் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. இதிற் கல்வி, கலாசாலை, சபை, சமயாசாரம், விவாகம், வியாபாரம், தர்மம், ஒற்றுமை என்னுமிவற்றின் பாகுபாடுகளைப்பற்றிய சீர்திருத்தமுறைகளடங்கியுள்ளன. எடுத்துக்கொண்ட விஷயங்களுக்கேற்ற வடமொழி, தென்மொழி மேற்கோள்களுடன் செவ்விய செய்யுணடையிற் பண்டிதர்கள் கண்டுவக்குமாறு எழுதப்பட்டிருக்கிறது. இத்தகைய நடை கல்வி முதிர்ச்சியில்லாத ஜனங்களுக்குச் சிறிது பொருள் விளங்காதிருப்பினும் புத்தகமாயிருப்பதால் அவர் பன்முறை படிக்கப்பொருளுணர்ச்சியடைவதுடன், கல்விவளர்ச்சியாகிய ஊதியமும் பெறுதற்கேதுவாயிருக்கிறது. இதன் சீர்திருத்தங்களிற் சிறுபான்மையிற் சிலர்க்கு அபிப்பிராயபேதமிருப்பினும் பெரும்பாலும் நல்லனகொண்டு தீயனவொழித்தல் எல்லோர்க்குமொப்ப முடிந்ததாகையால் அத்தகைய

சீர்திருத்தங்களை நிராக்ஷேபமாக நகரத்தாரேயன்றி நம் நாட்டிலுள்ள பிறரும் கைக்கொண்டொழுகத்தலைப்படுவராயின் நாகரீக முதிர்ச்சி பெற்று நந்தமிழ்நாடு நன்னிலையில் நிற்குமென்பதிற் சிறிதுமைய மில்லை.

ஸ்ரீகந்தபுராண மகேந்திரகாண்டம்:—இதற்கு, மதுரைத்தமிழ்ச் சங்கத்து வித்வானும், இந்துமதப் பிரசாரகருமாகிய காரை பிர்ம்மஸ்ரீ, சிவசிதம்பர ஐயரவர்களா லெழுதப்பட்டு மதுரைத் தமிழ்ச் சங்கத்து வித்வான் சுன்னுகம் ஸ்ரீமான்: அ. குமாரசுவாமிப்பிள்ளை யவர்களாற் பரிசோதிக்கப்பட்ட பதவுரையும், விசேடவுரையும் சேர்த்து நன்கு பதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வுரை படிப்பவர்களுக்குப் பொருளினிது விளங்கும்படி தெளிவான நடையிலெழுதப்பட்டிருக்கிறது. இவ்வாறே பழையநூல்களுக்கு உரையெழுதி வெளியிடுபவரெல்லாம் தமிழ் வளர்ச்சிக்குதவி செய்பவராவர். ராயல் 8-பக்கங்கொண்ட பாரம் 47-உள்ள இப்புத்தகம் 1-க்கு விலை ரூ 2. வேண்டுவோர் ஸ்ரீமான்-கா. சி. மகேசசர்மா, நடராஜமாளிகை, பருத்தித்துறை, இலங்கை. என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சோற்பொழி வாற்றுப்படை:—இது திருநெல்வேலி ஸ்ரீமான்: S. பால்வண்ண முதலியாரவர்களாற் பிறமொழி விரவாத தமிழ்நடையி லெழுதப்பெற்று மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் எட்டாவது வருடக் கூட்டத்திற் படிக்கப்பட்டது. இச்சிறு புத்தகத்தில், உபந்நியாசம் செய்யப்பழகுவோர் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் பலவிய லாகப் பகுக்கப்பட்டு விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதனடையி லிடை யிடையே வழங்கத்தகும் வடமொழிகளை விலக்கி அவற்றிற்கு வேண்டுந் தமிழ்மொழிகள் படைத்து வழங்கப்பட்டிருத்தலால் அவை எளிதில் விளங்குமாறு அருஞ்சொல்விளக்கம் எழுதிச் சேர்க்கப்பெற்றிருக்கிறது. பிறமொழிவிரவாது தமிழ்மொழி வழங்குதற்கு வழிகாட்டியாக இப் புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்ட முதலியாரவர்கள் தமிழபிமானம் பாராட்டத்தக்கதே. இதன் விலை அணா. 4.

ஸ்ரீ பகவத்கீதை:—இது திருவகீந்திரபுரம் சேட்லூர் வித்வான் ஸ்ரீ. உ. வே. நரசிம்மாசாரியஸ்வாமியால் தமிழில் எழுதப்பெற்றுச்சிங்

தாத்திரிப் பேட்டை ஸத் ஸம்ப்ரதாய வர்த்தனீ சபையாரால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டு மாதம் ஒரு சஞ்சிகையாக வெளியிடப்பெற்று வரு கிறது. இதன் முதல் மூன்று சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. இப்ப திப்பில், கீதாஸ்லோகங்களுக்குத் தமிழ்ப் பதவுரையும், இராமாநுஜ பாஷ்யம், அதன் தாத்பர்ய சந்திரிகை, கீதார்த்த சங்க்ரகம், கீதார்த்த சங்க்ரகரக்ஷை என்னுமிவ் வடநூல்களுக்கு நேரான தமிழ்மொழி பெயர்ப்பும், கீதார்த்தசங்க்ரகத் தமிழ்ப்பாசுரங்களுக்குப் பொழிப்புரை யும் சேர்த்து அச்சிடப்பெறுவதாகக் காணப்படுகிறது. எல்லோருக் கும் இனிது பொருள்விளங்கும்படி எளிய தமிழ்நடையி லெழுதப் பட்டுவருகிறது. பலபல பாஷைகளிலும் மொழிபெயர்க்கும் பெருமை வாய்ந்த கீதாபாஷ்ய முதலிய அரியநூல்களைத் தமிழில் மொழிபெ யர்த்து எளியவிலைக்குக் கொடுக்கும் லோகோபகாரிகளான ஸத்ஸம்ப் ரதாய வர்த்தநீ சபையாருக்குத் தமிழுலகம் நன்றிபாராட்டத்தக்கது. ராயல் 8-பக்கங்கொண்ட பாரம் 16-உள்ள சஞ்சிகை 1-க்கு விலை அணா. 6. தபாற்கூலிவேறு. வேண்டுபவர்கள் சென்னைச் சிந்தாத்திரிப்பேட் டை அக்ரகாரத்தெரு 34-ஸத்ஸம்ப்ரதாய வர்த்தநீ சபை காரியதர்சி யவர்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

திருத்தொண்டர்மாலை:— இது திருக்கைலாயமலையிற் சிவபெரு மானிடத்துத் திருத்தொண்டு பூண்டுநின்றவரும், நம்மனோருய்ய இப் பூமியின்கண் திருவவதாரஞ்செய்து அற்புதத் திருவிளையாடல்களை நடத்தினவருமாகிய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருவாய்மலர்ந் தருளிய திருத்தொண்டத்தொகையுள் விதந்தோதப்பெற்ற திருத் தொண்டர்களின் அரும்பெருஞ்செயல்களை நந்தமிழ்மக்கள் எளிதினு ணர்ந்து அவர்கண்மாட்டன்பு செலுத்தற்கும், இம்மை மறுமையின் பங்களையடைதற்குஞ் சாதகமாக வெண்பாவினால் இரண்டடிதொண் டர்குழாங்களின் அருஞ்செயலும், இரண்டடி அவ்வரும் பெருஞ்செ யலையுள்ளடக்கித் தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறளையமைத்தும் குமாரபாரதி முனிவராலிய ற்றப்பெற்றது. இது பின்னையவிரண்டடி போலச் சொன்னயம் பொ ருணயந் தொடைநய மமையப்பெற்றுக் கற்போருள்ளத்தைக் கவரும் வண்ணம் பத்திரசமுதிரப்பெற்றுள்ளது. இதிலுள்ள அரும்பதமுத

லியவற்றை யாவருமறிந்துகொள்ளுமாறு சென்னை வித்வசிரோமணி கா. வா. நமச்சிவாயமுதலியாரால் எழுதப்பெற்ற அரும்பதவுரையுஞ் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்வரிய பெரியபத்திநூலை வெளியிடுதற்குத் தலைநின்ற மகா-ள-ள-ஸ்ரீ: வயி. மு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள், மெ. அரு. நா. இராமனுதச்செட்டியாரவர்கள் என்னும் இவ்விருவருடைய சைவாபிமானமும் தமிழபிமானமும் யாவராலும் பாராட்டத்தக்கன.

பொழுதுபோக்குந் தோழன் :— இச்சிறுபுத்தகம் கோயமுத்தூர் ஸ்ரீமான்-சி. எஸ். இராமதுரை ஐயரவர்களால் எழுதப்பெற்றது. இதில், உல்லாசமாகப் பொழுதுபோக்குவார் படிக்கத்தக்க விநோத சம்பவங்களும் சம்பாஷணங்களும் அடங்கியுள்ளன. இது பெரும்பாலும் ஆங்கில பாஷையிலுள்ள விஷயங்களை மொழிபெயர்த்தும் நம் நாட்டின் நாகரிகமேம்பாடுகளை மாற்றியும் எழுதப்பட்டிருப்பதாக முகவுரையால் விளங்குகிறது இதன் விலை அணு—4.

இடைக்காடர் திருவள்ளுவர் சரித்திரங்கள்:—பண்டைக்காலத்துத் தண்டமிழ்ச்சங்க மருவிய புலவர் பெருமக்களாலும், ஆலவாய்மேய அவிர்சடைக்கடவுளாலும் நன்கு மதிக்கப்பெற்ற இப்பெரியாருடைய சரித்திரங்கள் முருகதாஸரியற்றிய புலவர் புராணத்தைப் பெரும்பாலுந் தழுவி இனிய தமிழ்நடையில் வேலூர் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத்-பு. க. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்களால் எழுதப்பெற்றிருக்கின்றன. இப்புத்தகந் தமிழ்நடை பயிலும் மாணவர்கட்கு மிகப்பயன் படத்தக்கது. இதன் விலை—அணு 3.

ப—ர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

1911-ஷூ அக்டோபர்மீ 1உ முதல 31உ முடிவுவரையுள்ள வரவு செலவு கணக்கு.

வரவு.	தொகை ரூபா.	அ.	ப.	செலவு.	தொகை. ரூபா.	அ.	ப.
காருடுகொத்தான் மகா-ா-ா-ஸ்ரீ சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களிடமிருந்து நாளது விரோதிகிருதுஷூ புரட்டாசிமீ த்துக்குரிய மாதச்சந்தா வரவு ...	50	0	0	சென்ற அக்டோபர்மீ த்திய சம்பளம் பட்வாடா ரிஜிஸ்டர்ப்படி சங்கம் சிப்பந்திகளுக்குச் செல்லாக்கியது ரூ	370	4	10
செந்தமிழ்ச் சந்தா வகையில் வரவு ...	35	3	0	சென்ற ஆகஸ்ட்மீ த்திய பட்வாடா ரிஜிஸ்டர்ப்படி 11–9–11-ல் செலவு தாக்கலான தொகைபோகபாக்கி செல்லாக்கிய வகையில் ...	35	0	0
அச்சுக்கூலிவகையில் பிரிண்டிங்ஆபீசு வரவு...	355	0	6	சென்ற செப்டம்பர்மீ த்திய கலாசாலை மாணவர்களின் ஆகாராதி போஷணை பட்வாடா ரிஜிஸ்டர்ப்படிசம்பளம்செல்லாக்கியது 68— 7—0			
பைண்டிங் ஆபீசு வரவு ...	32	3	0				
புத்தக விற்பனை வரவு ...	131	2	6	சென்ற மேமீ த்திய ஷை பட்வாடா ரிஜிஸ்டர்ப்படி 11–9–11-ல் செலவு தாக்கலான தொகைபோக பாக்கி செல்லாக்கியது 3 — 9-10			
விளம்பரவகையிற் சார்ஜ் வரவு (Advertisement Charges) ...	10	0	0	மேற்காட்டிய விவரப்படி மொத்தம் செலவு...	72	0	10
கட்டிங் மெஷீன் சத்தி சாணைபிடித்த கூலி வுவா ...	1	0	0	கலாசாலை மாணவர்களுக்குவழக்கம்போல் தீபாவளி பண்டிகைக்கு வேஷ்டிவாங்கிக்கொடுத்தவகையிற் செலவு ...	23	13	9

	ரூ	அ	பை			ரூ	அ	பை
சங்கம் காலிநிலம் மாக்கடை வாடகை விரோதிகிருதுவரு புரட்டாசிமீ த்துக்குவரவு ...	35	0	0	கலாசாலை உபயோகத்துக்கு வாங்கிய புத்தகங்கள் ...		3	15	3
				பைண்டிங் ஸ்டேஷரிச்செலவு	0— 1—0			
				ஷை கண்டின்ஜன்சிச் செலவு	8 — 7—0			
				மேற்காட்டிய விவரப்படி பைண்டிங் செலவு...		8	8	0
				பிரிண்டிங் ஸ்டேஷனரிச்செலவு	38—15—0			
				ஷை ரயில்வேசார்ஜ் வகையிற்செலவு	0— 8—0			
				ஷை ஆயில் என்ஜின் சம்பந்தமாய் எண்ணெய்ச்செலவு	20—14—1			
				ஷை கண்டின்ஜன்சிச்செலவு	16— 4–11			
				மேற்காட்டிய விவரப்படி பிரிண்டிங் செலவு...		76	10	0
				போஸ்டேஜ் வகையிற் செலவு ...		17	0	0
				அச்சிட்ட பாரங்களை வைப்பதற்காக ஸ்டோர்ரூம் உபயோகத்துக்கு பெஞ்சு 3 செய்த வகையிற் செலவு ...		8	4	0
				லைபிரேரிஉபயோகத்துக்கு வாங்கிய புத்தகம்...		0	12	0
				சரஸ்வதிபூஜைச் செலவு	5— 5—7			
				கூலி, வண்டிவாடகை, ரசீது, லேபிள் வகையறாச் செலவு	0— 7—3			
				சென்னையிலிருந்து பாக்கி அபிதான சிந்தாமணிப் புத்தகம் வந்த வகையில் ரயில் செலவு	5— 8—6			
				சில்லரைச்செலவும ஆபீசு கண்டின்ஜன்சி வகையறாச் செலவும்	2—13—0			
				ஆபீசு தேதி ரப்பர்ஸ்டாம்பு ரிபேர் செய்தவகையிற் செலவு	2— 4—0			
				கலாசாலை உபயோகத்திக்கு மண்ணெண்ணெய் டின், ஸ்டேஷனரி வகையறா வாங்கியது	4—10—0			

137

				சங்கப்பரீக்ஷையிற்றேரியவர்க்கு பீ. ஏ. 2-வது பரிசு அனுப்பியது 45— 0—0			
				செந்தமிழ் விஷயதானத்துக்காக கனம் பிரசிடெண்ட் டிரஸ்டியவர்கள் உத்தரவுப்படி அனுப்பியது 7— 4—0			
				பிரிண்டிங் ஆபீசு பில்ப்படி சங்கம் ஆபீசு அச்சுக்கூலி வகைச்குச் செல் ... 102 —3—0			
				ஷை ஆபீசு பில்ப்படி ஷை ஆபீசு பைண்டிங் வகைக்குச் செல் ... 15— 5—0			
ஆக வரவு ரூ	649	9	0	ஆக மேற்காட்டிய விவரப்படி செலவு ரூ	190	12	4
சென்ற செப்டம்பர்மீ த்தின் கடைசித்தேதியில் நின்ற பாக்கித்தொகை ரூ ...	523	4	9	ஆக மொத்தம் செலவு ..	807	1	0
				போக பாக்கியிருப்பு ...	365	12	9
ஆக மொத்தம் வரவு ...	1172	13	9	ஆக மொத்தம் ...	1172	13	9
ஆக மொத்தம் ரூ ...	1172	13	9	ஆக மொத்தம் ...	1172	13	9

M. R. SRINIVASA IYER,

For Manager.

Audited and found Correct

S. GOPALASAMY IYENGAR,

Auditor. 6—11—11.

Hair Troubles Avoided

By continually using such a preparation as

KUNTAL-KAUMADI

THE NATIONAL HAIR OIL.

PRICE 12 AS. PER BOTTLE.

You keep the scalp moist and cool. The roots of the Hair are supplied with energy and nourishment and the hair maintained in the best possible condition.

Price per Big Phial As. 12 only. Per V.P.P. Rs. 1-3.
„ „ 3 Rs. 2. only. „ „ Rs. 2-11.

TRY IT TO-DAY.

Sole Agents to Madras Presidency,

M. Shaw Heerdayal & Co.,
144-5. China Bazaar Road,
Madras.

KAVIRAJ R. C. SEN L. M. S.
216, Cornwallis Street, Calcutta.

YOUNG LADIES.

Suffer in silence from various disorders peculiar to the Sex. Dr. Syam's Ovarine is the only infallible remedy for them.

REMARKABLE VERDICT.

Dr. S. Z. Pa. M. A. M. B. B. S., de Paris etc. Consulting Physician and Surgeon, Occulist, Patiala State, Dr. Syam's Ovarine is undoubtedly an effective remedy in irregular menses and white discharge.

Miss. G. M. Bradley M. D. Brux, L. S. A. (Lord) Superintendent, St. John's Hospital and Port Plague Officer, Bombay.—Dr. Syam's Ovarine was successful in the two cases of female complaints I have used it for.

Miss. F. G. Wells, L. M. S., L. R. C. P., and S. C., Superintendent, Gosha Hospital, Madras.

The sample bottle of Ovarine has done good to my patient. Please send another bottle.

PER PHIAL RS. 2-8. 3 PHIALS RS. 16.

Sole Agent:—HARRIS & Co., Kalighat, Calcutta. *Telegrams:-* "OVARINE."

No. 3.

CHILDREN IN INDIA.

have much to contend with, owing to the enervating climate.

Early in life they need a tonic and reconstructive to aid in developing their little bones and muscles.

SCOTT's EMULSION

contains the proper bone and tissue builder for children.

IT IS IDEAL.

The results are noticeable shortly after taking.

NOT TOUCHED BY HAND

FOR SALE AT ALL CHEMISTS.

SCOTT & BOWNE, LTD.

MANUFACTURING

CHEMISTS

LONDON, ENGLAN

(No. 1.)

CHAMBERLAIN'SPAINBALM

உடம்பில் நோய்க்குச் சேம்பர்லேன் துரை செய்திருக்கு தைலம்.

முதுகுபிடிப்பு, பக்கசூலை, கைகால்

ஓய்ச்சல், தலைநோய், காயங்கள்,

இவைகளைத் தீர்க்கும்

கீல்வாயுவையும், தீர்க்கும், தீர்க்கும், தீர்க்கும்.

கீல்வாய்வு என்றால் என்ன?

கீலுக்குக்கீல் வீக்கமும் வேதனையும், குத்தலும் குடைச்சலும் இழுப்பும் வலிப்பும். உட்காரமுடியாது, உறங்கமுடியாது.

இப்படியெல்லாம் இருந்தால், கீல்வாயுவுதான் என்று கொள்ளும்; தப்ப, சேம்பர்லேன் தைலத்தை வாங்கிக்கொள்ளும்.

நோவும் வீக்கமுமிருக்குமிடத்தில் தைலத்தைத் தேய்த்தவுடனே உள் எலும்புவரைக்கும் மருந்திறங்குவதை உணர்வீர். உடனே வேதனை குறையும். தைலத்தைத் தேய்த்துவர நாளடைவில் நோய் அடியோடு நீங்கும்.

இது முழுவதும் மூலிகை கைபடாமல் செய்தது.

எங்கும் விற்பது, எளிதில் கிடைப்பது.

சின்னபுட்டி ரூபா. 1. —— பெரிய புட்டி ரூபா. 2.